விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 20 சனிக்கிழமை (04.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197


# சமாதானமும் அபிவிருத்தியும் நாட்டில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது

## பாலித கோஹன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தற்பொழுது நாட்டில் நிரந்தர சமாதானம் மற்றும் அபிவிருத்தியை நோக்கியும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன்ன தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய 11ஆம் திருவிழாவான நேற்று பிள்ளையார், முருகன் வள்ளி தெய்வானை சமேதராய் அம்பாள் வெளிவீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.

# மூன்று இலட்சம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்ட அரசு தவறிவிட்டது

## ரைம்ஸ் ஏடு குற்றச்சாட்டு

(லண்டன்)

இலங்கையில் முகாம்களில் தங்கியுள்ள 3 இலட்சம் அப்பாவித்தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதுவரை எதையும் செய்யவில்லை என்று பிரித்தானியாவிலிருந்து வெளிவரும் ரைம்ஸ் ஏடு குற்றம் சாட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டதாக அறிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் தமிழிலும் சிங்களத்திலும் உரையாற்றும் போது, இந்தப் போர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரே (14ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் சுற்றிவளைப்பில் 12 தமிழர்கள் கைது

(கொழும்பு)

அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பிரதேசங்களில் நடைபெற்ற திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் 12 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படையினர் நடத்திய இந்த தேடுதல் நடவடிக்கையில் பல தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். நேற்று முன்தினம் வியாழக்கிழமை (14ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸின் மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

(கொழும்பு)

யாழ்.மாநகர சபைத் தேர்தலுக்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே உயர் நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை எடுத்தது.

குறித்த வேட்பு மனுவின் சத்தியக்கடதாசி ஒன்றிலுள்ள கையொப்பம் தொடர்பாக ஏற்பட்ட சிக்கல் காரணமாகவே அதனை நிராகரித்ததாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு கடன் வழங்குவது குறித்து நாணய நிதியம் தொடர்ந்து ஆலோசனை

(கொழும்பு)

இலங்கைக்கு 1.9 பில்லியன் டொலர்கள் கடன் வழங்குவது குறித்து தமது நிறைவேற்று அதிகாரிகள் சபைதான் முடிபு செய்யவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

இலங்கையின் இந்தக் கடனுக்கான விண்ணப்பம் குறித்து முடிபு செய்வதற்கான கூட்டத்திற்கான திகதியை சபை இன்னமும் நிர்ணயிக்கவில்லை என்று நாணய நிதியத்தின் பேச்சாளர் கரோலின் அக்கின்சன் தெரிவித்துள்ளார்.

ஆனால் இதுதொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளிற்கு எதிரான போரின் (14ஆம் பக்கம் பார்க்க)

## கலைப் பீடாதிபதியாக பேரா.ஞானகுமாரன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாக பேராசிரியர் என்.ஞானகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலைப்பீடாதிபதி நியமனத்துக்காக நேற்று நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் அவர் கலைப்பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் அடுத்து வரும் மூன்று வருடங்களுக்கு கலைப்பீடாதிபதியாக பதவி வகிப்பார். (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இன்னும் பாதுகாப்பில்லை எச்சரிக்கிறது பிரித்தானிய அரசு

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு, கிழக்கு மற்றும் யால தேசிய பூங்கா ஆகிய இடங்களுக்குத் தமது பிரஜைகளை செல்ல வேண்டாம் என பிரித்தானியா கேட்டுள்ளது.

பிரித்தானிய பொதுநலவாய அலுவலகம் விடுத்துள்ள பிந்திய பயண வழிகாட்டியிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அத்துடன் புத்தளத்தின் ஊடான திருகோணமலை மேற்கு வீதி, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் ஏ-25, ஏ-27 உட்பட்ட பாதைகளும் பிரித்தானியாவின் பயண எச்சரிக்கைக்குள் வந்துள்ளன.

இராணுவ சீருடைக்கு ஒத்த உடைகளை எடுத்துச் செல்ல வேண்டாம் எனவும், தம்மை அடையாளப்படுத்தக் கூடிய அடையாளங்களை கொண்டுசெல்லவேண்டுமெனவும், பொலிஸாரால் தடுத்து (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த எகிப்துக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எகிப்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

எகிப்திய தலைநகர் ஹெய்ரோவில் இடம்பெறவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கிலேயே அவர் அங்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## சீனா வாழ்நாள் நண்பன் இலங்கை அரசு அறிவிப்பு

(கொழும்பு)

சீனாவே இலங்கையின் வாழ்நாள் நண்பன். எனவேதான் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் நான் இங்கு வந்துள்ளேன் என வெளிவிவகாரத் துறை அமைச்சர் றோகித போகல்லாகம தெரிவித்துள்ளார்.

ஐந்து நாள் பயணமாக சீனா சென்றுள்ள அவர், சீன ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாம் நெருக்கடிகளைச் சந்தித்தபோது சீனா எமக்கு உதவியாக இருந்தது.அது எமது வாழ்நாள் நண்பன். சீனாவே உலகின் மிகவும் முக்கிய (14ஆம் பக்கம் பார்க்க)

## மொனராகலை காட்டுப் பகுதியில் ராம் தலைமையில் இருபது புலிகள்

### பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(கொழும்பு)

நாட்டை மீட்டெடுத்து விட்டோம் என்ற திருப்தியில் நாம் சும்மா இருந்துவிடக் கூடாது. இன்றும் யால காட்டில் ராம் தலைமையில் 20 புலிகள் நடமாடி வருகின்றனர். அவர்களையும் விரைவில் முடித்து விடுவேன் என்று மொனராகல சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாரத்ன தெரிவித்தார்.

மொனராகலப் பகுதியிலுள்ள விகாரையொன்றில் (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தேசிய மட்டப் போட்டிகளில் விளையாட

## யாழ். பாடசாலைகள் இரண்டைச் சேர்ந்த உதைபந்தாட்ட அணிகள் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட அழைப்பில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு பாடசாலைகளின் 17 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக கொழும்பு புறப்பட்டுள்ளன. நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும், ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய அணியுமே தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்று கொழும்பு சென்றுள்ளன.

அணிகளின் விபரம் வருமாறு

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

அ.அரிகரன், தி.தனேஷ், சி. பிரகாஷ், பு.கிருஷ்ணானந்தன், ப. விஷ்ணுகாந், ந.பிரிய தர்ஷன், ம.பானுஷன், வி.கஜேந்திரன், ந.சிந்துஜன், மற்றும் நே.அங்கதன்.

**ஏழாலை சிறி முருகன் வித்தியாலயம்**

கு.நிசாந்தன், ஜெ.பிரசாந், ச.கஜிந்தன், ர.ஜெகதீஸ், க.கஜீபன், பு.றிஜோன்ந், பா. சக்க ராயுதன், ப. பஜீபன், மோ. கனீஸ்ரன் மற்றும் தி. மயூரதன்.

## இலவச உலருணவு நிவாரண விநியோகம்

இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு 2009 யூன் மாதத்திற்கான இலவச உலருணவு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மேற்படி விநியோகத்திற்குரிய சிவப்பு நாட்டரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியன ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப் பொருட்களுக்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ. சங்கங்கள் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று பொருட்களை களஞ்சியத்திலிருந்து பெற்று விநியோக நடவடிக்கைகளை எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பிக்குமாறும் அரசாங்க அதிபர் க. கணேஷ் அறியத்தந்துள்ளார்.

| பொருட்கள் | விலை | ஒரு அங்கத்தவர் | 2 அங்கத்தவர் | 3 அங்கத்தவர் | 4 அங்கத்தவர் | 5 அங்கத்தவர் |
|---|---|---|---|---|---|---|
| சிவப்பு நாட்டரிசி | 64.98 (Kg) | 2.275 | 4.400 | 5.900 | 7.200 | 7.800 |
| கோதுமை மா | 58.20 (Kg) | 1.200 | 3.000 | 4.000 | 4.000 | 6.400 |
| சீனி | 74.90 (Kg) | 1.000 | 1.500 | 2.300 | 3.300 | 4.500 |
| பருப்பு | 169.85 (Kg) | 0.250 | 0.250 | 0.300 | 0.350 | 0.550 |
| மொத்தம் | | 336.00 | 616.00 | 840.00 | 1,008.00 | 1,260.00 |

## விண்ணப்பம் கோரல்கள்

(கொழும்பு)

விலைமதிப்பு திணைக்களத்தில் இலங்கை விலை மதிப்பு சேவையின் வகுப்பு III தரம் 11 இன் உதவி மாவட்ட விலை மதிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெருந்தோட்ட முகாமைத்துவமும் விலை மதிப்பீடும்தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவராகவும் இருத் தல் வேண்டும்.

விண்ணப்பங்களை 2009.07.17 ஆந் திகதிக்கு முன்னதாகத் கிடைக்கக் கூடியவாறு செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு செயலகம், கொழும்பு 01 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

★ ★ ★

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா் கல்வியாண்டு 2009/2010 கற்கை நெறிக்கு பொருத்தமான தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை பரீட்சை திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளரினால் 2008 இல் அல்லது அதற்கு முன் நடத்தப்பட்ட க.பொ.த. உயர்தரத்தில் (புதிய பாடத்திட்டத்தில்) ஆகக் குறைந்தது இணைந்த கணிதம், பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒரே அமர்வில் மூன்று சித்திகளையும் க.பொ.த சாதாரண பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம் 250 ரூபாவுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், இல 42, ரொட்சிகோ பிளேஸ், மட்டக்குளி, கொழும்பு 15 என்ற முகவரிக்கு 2009.07.24 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இது தொடர்பான மேலதிக விபரங்களை 03.07.2009 வர்த்தமானியிலோ, வலம்புரி அலுவலகத்திலோ பார்வையிட முடியும். (ச-5)

## யாழ். பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக முச்சக்கர வண்டிகள் நிறுத்த அனுமதி



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உடனடி நடவடிக்கை காரணமாக யாழ் பிரதான பஸ் தரிப்பு நிலையத்தின் முன்பாக வாடகை முச்சக்கர வண்டிகள் தரித்து வைக்கப்பட்ட சேவையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதி நேற்று முதல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் பலர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து தங்களது முச்சக்கர வண்டிகளை யாழ் பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக தரித்து வைத்து சேவையில் ஈடுபடுத்த அனுமதி பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். மேற்படி விடயம்தொடர்பாக தாங்கள் பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டிருந்தும் பயனேதும் கிட்டவில்லை என்றும் இப் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இவர்களது கோரிக்கை தொடர்பில் அவதானஞ்செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக அமையப் பெற்றிருக்கும் மேற்படி இடத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நிலைமையை நேரில் பார்வையிட்டதுடன் உரிய பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடி தற்போதைக்கு ஐந்து முச்சக்கர வண்டிகளை தரித்து வைத்து சேவையில் ஈடுபடுத்த அனுமதி பெற்றுக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை வடக்கில் மேம்படுத்த நடவடிக்கை

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் கடற்றொழில்துறையை மேம்படுத்த மீனவக் கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என மீன்பிடி, நீரியல் வளத்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இத்திட்டத்தின் கீழ் மீனவர்களுக்குத் தேவையான படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடிக்குத் தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. வடக்கில் மீன் பிடித் தடைகள் இப்பொழுது அகற்றப்பட்டு 24 மணி நேரமும் மீன்பிடியை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 219 மீனவக் கிராமங்களில் உள்ள 39 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் நன்மையடையவுள்ளனர்.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் வருடாந்தம் 67ஆயிரத்து 500 மெற்றிக் தொன்னையும் விடக் கூடுதலான மீன்கள் வடக்கில் இருந்து தெற்கிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. எனினும் வடக்கின் கடற்றொழில்துறையை மேம்படுத்துவதன் மூலம் அதைவிடக் கூடுதலான மீன்களை தெற்கிற்கு கொண்டுவர முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் முத்துப்பிள்ளை



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி சுப்பிரமணியம் முத்துப்பிள்ளை 30.06.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னராசா மற்றும் நாகேந்திரம், குலேந்திரம், இராசேந்திரம், கன்னிகாதேவி, மகேந்திராதேவி, இந்திராதேவி, சந்திராதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், யோகேஸ்வரி, மகாதேவி, முருகசோதி, தவமணிதேவி குணரத்தினம், சின்னத்துரை, ஆனந்தராசா, உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் கேமவர்ச்சனி, கேமமாலினி, திவாகரன், சுபாகரன், ஜனகன், ஜனார்த்தனி, நிருபானந்தன், லோகானந்தன், லயானந்தன், தயானந்தன், அருளானந்தன், கவிதா, லலிதா, வசிகரன், ஜசிதா, செந்தூரன், சுபேசன், சுபேந்தினி, சயந்தன், பிரதீபன், ரிஜதீபா, நிசாந்தன், நிதுர்ஜா, நிவேதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மீசாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை நடைபெறு மென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை

(2910)

தகவல்
குடும்பத்தினர்

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் பிறப்பு, திருமண சான்றிதழ் வழங்குதல் தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 7 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3.30 மணி வரை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் சேவையில் பொதுமக்கள் பங்கு பற்றி பயன டையுமாறு பிரதேச செயலாளர் செந்தில் நந்தனன் கேட்டுக் கொள்கின்றார். (ச-4)

## பரீட்சைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்டு வரும் முது கல்விமாணி கற்கை நெறி, அபிவிருத்தி கற்கைநெறி, சனத்தொகை அபிவிருத்திக் கற்கை நெறி, பிராந்தியத் திட்டமிடல் கற்கை நெறி ஆகிய கற்கைநெறிகளுக்குரிய இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் இந்த மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேரசூசியினை எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் பெற்றுக் கொள்ளலாம் என பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ச)

## தென்மராட்சி பிரதேச் மக்களின் மீளக்குடியமர்வு குறித்த விசேட சந்திப்பு

(சாவகச்சேரி)

மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல்தொடர்பான சந்திப்பு இன்றுகாலை 10 மணிக்கு கைதடி நாவற்குழிதெற்கு, ஸ்ரீமகாவிஷ்ணு சனசமூக நிலையத்தில் நடை பெறவுள்ளது.

மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி தெற்கு மீளக்குடியமர்வோர் சங்க செயலாளர் தி. தங்க வேலு அறிவித்துள்ளார்.

## சட்டமாணி கற்கை நெறி தெரிவானோரின் விபரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணி கற்கை நெறி 2009/10 கல்வியாண்டு நுழைவுத் தேர்வில் சித்தியடைந்தோரின் பெயர் விபரங்களை பிராந்திய நிலையத்தில் பார்வையிடலா மென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி இறுதியாண்டுப் பரீட்சைகள் நாளை 5ம் திகதி முதல் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதால் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய நிலையில் உள்ள மாணவர்கள் அனைவரையும் தவறாது தோற்றுமாறும் இதுவே இறுதிச் சந்தர்ப்பம் எனவும் இணைப் பாளர் அறிவித்துள்ளார். (ச)

## கடமை நிறைவேற்று அதிபர்கள் நியமனம்

யாழ். கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகவிருந்த இரண்டு பாடசாலை களுக்கு இலங்கை அதிபர் சேவை பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கள் இருவரை கடமை நிறைவேற்று அதிபர்களாக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வேதிசெல்வரட்ணம் நியமனம் வழங்கியுள்ளார்.

இவ்வாறு திருமதி செ. ரவீந் திரராசா யாழ். விக்னேஸ்வராக் கல்லூரிக்கும், ஆர். புஷ்பரட்ணம் உரும்பிராய் றோ.த.க பாடசா லைக்கும் கடமை நிறைவேற்று அதிபர்களாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேத நாயகத்தின் சிபாரிசுடன் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் நியமனம் வழங்கியுள்ளார். இதேவேளை யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி அதிபராக கடமையாற்றிய திருமதி எம். விமலநாதன் யாழ். சன்மார்க்க மகா வித்தியாலய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# இன்று ஒரு தகவல்

## ஞானியர் நிலை

ஒரு குரு இருந்தார். அவர் ஒரு பழக்கத்தைக் கைக் கொண்டிருந்தார்.

மற்றவர்களுக்குச் சொந்தமான சின்ன சின்ன பொருட்களைத் திருடி மாட்டிக் கொள்வார். அதன் பின் சிறைக்குச் செல்வார். விடுதலையான பின் மறுபடியும் திருடுவார் இதுவே அவருக்கு பழக்கமாகி விட்டது.

அவருடைய சீடர்களுக்கு இது பெரிய புதிர். நம்முடைய குரு ஒரு பெரியஞானி. அவர் இப்படிச் செய்கிறாரே என்று நினைக்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஏன் இப்படிச் செய்கிறார்? என்று ஒன்றும் புரியவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள்.

ஒருநாள் அவரிடமே கேட்டார்கள்.

ஏன் சுவாமி இப்படிச் செய்கிறீர்கள்? செருப்பைக் கூட திருட வேண்டுமா? உங்களுக்கு என்ன தேவை என்று எங்களிடம் கூறினால் ஒரு செருப்புக் கடையே வாங்கிவந்து குவித்து விட மாட்டோமா? ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? உங்களுக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டார்கள்.

அதற்கு பதில் எதுவும் கூறாமல் சிரித்துக் கொண்டே போய் விட்டார் குரு.

அதன் பின்னரும் அவர் வழக்கத்தை நிறுத்தவில்லை. திருடுவது – மாட்டிக் கொள்வது – சிறைக்குச் செல்வது. சீடர்கள் கேட்டால் சிரித்துக் கொண்டே போய்விடுவது என்று அவரது காலம் கடந்து விட்டது.

கடைசியில் அவர் மரணப் படுக்கையில் கிடந்தார். சீடர்களெல்லாம் அவரைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

இப்பொழுதாவது குரு உண்மையைச் சொல்ல மாட்டாரா என்று நினைத்து,

"சுவாமி! இப்பொழுதாவது சொல்லுங்கள். நீங்கள் அடிக்கடி திருடிவிட்டு சிறைக்குச் சென்ற காரணம் என்ன? அதிலுள்ள மர்மம் என்ன? என்று கேட்டார்கள்.

"அதில் பெரிய இரகசியம் ஒன்றுமில்லை. சாதாரண விடயம் தான்" என்றார் குரு.

இவர்களுக்கு இன்னமும் ஆச்சரியம்! என்ன சாதாரண விடயமா? என்று நினைத்து குழம்பிப் போய் நின்றார்கள். இப்பொழுது அந்தக் குரு சொன்னார் :

"வேறு ஒன்றுமில்லை. நான் அடிக்கடி சிறைக்குப் போக ஆசைப்பட்டேன். அதனால் தான் திருடினேன். உள்ளே இருப்பவர்களைச் சந்தித்துப் பேசி அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும் என்று நினைத்தேன். அதற்கு இதைவிட சிறந்தவழி வேறெதுவும் எனக்குத் தோன்றவில்லை. அதனால் தான் சின்னச்சின்ன திருட்டுக்கள் செய்தேன்.

என்னுடைய பயம் என்னவென்றால், "எங்கே மாட்டிக் கொள்ளாமல் போயிடுவோமோ?" என்பது தான். மாட்டிக் கொண்டால் தானே உள்ளே போக முடியும். எனக்குத் தண்டனை கொடுக்கும் நீதிபதியும் மிகவும் நல்லவர். ஒவ்வொரு தடவையும் ஆறு மாதத்துக்கு குறையாமல் தண்டனை கொடுத்து விடுகிறார். உள்ளே எனக்கு ஒரே சந்தோஷம் தான். பலர் திருந்தி வெளியே வருவதற்கு நான் உதவி செய்திருக்கிறேன்" என்றார்.

உண்மையான ஞானிக்கு அரண்மனையும் ஒன்றுதான். சிறைச்சாலையும் ஒன்றுதான் என்பதை தன்னுடைய வாழ்க்கை மூலமாக நிரூபித்துக் காட்டியவர் அந்தக் குரு.

நம்ம ஆள் ஒருவன் இருந்தான். அவனும் கொஞ்சம் வித்தியாசமான ஆள்தான். அடிக்கடி திருடுவான் – மாட்டிக் கொள்வான் – ஜெயிலுக்குப் போவான். என்னப்பா இப்படிச் செய்கிறாயே என்று கேட்டால்...

"ஜெயில் என்பது எனக்கு மாமனார் வீடு மாதிரி" என்பான்.

"நிஜமாகவா?" என்றேன்.

"ஆமாம் சேர். என்னுடைய மாமனாரும் அங்கே தான் ஆயுள் தண்டனைக் கைதியாக இருக்கிறார்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விசேட தேவையுடைய மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**நல்லூர் கோட்டம்**

**தரம் - 1**

யோ. கோகுலவாசன் (நல்லூர் ஞானோதய வித்தியாலயம்), உ. கபினா (ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்), ம. தர்மிலா (பெரிய புலம் மகா வித்தியாலயம்), ர. பவதாரணி (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), யோ. ஹரிகரன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சு. சாருகான் (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்).

**தரம் - 2**

அ. அலெக்ஸ்மன் – (செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை), ய. சர்ஷாயினி (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), இ. ஜான்சன் (செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை), ச. யதுர்சன் (நாயன்மார்க் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை).

**தரம் - 3**

ச. மயூரி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), இ. கஜன் (நல்லூர் ஆனந்த வித்தியாலயம்), சு. அலிஸ் அஷிகா (கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை), இ. விஷ்ணுஜா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), த. அனுஜன் (முத்துத் தம்பி மகா வித்தியாலயம்)

**தரம் - 4**

சி. குயேந்தன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சா. வேணுசாந் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), சொ. கபில்ராஜ் (கோண்டாவில் இராம கிருஷ்ண வித்தியாலயம்) சி. டிலானி (முத்துத் தம்பி மகா வித்தியாலயம்), சி. மதுரன் (கொட்டடி நமசிவாய வித்தியாலயம்).

**தரம் - 5**

ச. நிவர்த்திகா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), சி. நிக்ஷன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), த. பிரணவிக்கா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), த. கிசாளினி (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), ம. சப்ளை (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

**தரம் - 6**

ம. உமாப்பிரியா (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), செ. யுவனேசன், மு. டிலக்சன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), அ. கஜானி (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), ம. கபிலன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

**தரம் - 7**

ம. தர்சன் (நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை).

**தரம் - 8**

சோ. கோகிலவதனி (நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), ந. கிருஷன் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), பா. பகிர்தன் (நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை).

**தரம் - 9**

மோ. வனோஜன், இ. சுபாசினி (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), ஜெ. அனோஜன் (முத்துத் தம்பி மகா வித்தியாலயம்), க. கஜடிலக்சன் (கந்தர்மடம் சைவ பிரகாச வித்தியாசாலை), ப. மதுசூதனன் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்).

**தரம் - 10**

பா. பானுசன் (இளையதம்பி இந்து வித்தியாலயம்). (முற்றும்)


(ஓ-7)

## தலைமைத்துவம் சார் பயிற்சிப் பட்டறை

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அரங்கப் பயிற்சிகளின் ஊடாக தலைமைத்துவம் சார் பயிற்சிப் பட்டறை இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இலகடி ராஜ லிங்கம் சனசமூக நிலைய முன் பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

அரங்கப் பயிற்சிகளை திருமறைக் கலாமன்ற வளவாளர் ஜெ.திருக்குமரனும் தலைமைத்துவப் பயிற்சிகளை எழுத்தாளர் எஸ்.யோசப்பாலா ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

இதேசமயம் குப்பிளான், உரும்பிராய், சின்னமடு, புத்தூர் ஆகிய தேர்வு செய்யப்பட்ட கிராமங்களிலும் மேற்படி பயிற்சிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-51)



சித்தன்கேணி - தனுவோடைப்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலய தேர்த் திருவிழாவில் சுவாமி தேரில் ஆரோகணித்து வருவதைப் படத்தில் காணலாம்

(படம் : அலுவலக செய்தியாளர்)

## இராசி பலன்

*04.07.2009*
*(ஆனி 20, சனிக்கிழமை)*
*துவாதசி முற்பகல் 10.25மணிவரை*
*அனுசம் முன்னிரவு 7.10 மணிவரை*
*இராகுகாலம் 8.57-10.27மணிவரை*
*சுபநேரம் 2.57-4.27 மணிவரை*
*சனிப் பிரதோச விரதம்*
*விவேகானந்தர் நினைவு நாள்.*

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், ஆரோக்கியக் குறைவு, தொழில் விருத்தி, மரியாதைக் குறைவு. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, தேகநலன், பிரயாண நன்மை. |
| மிதுனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், சத்துருஜெயம், சிந்தனை மிகுதி. |
| கடகம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணக்குறைவு, மனச்சஞ்சலம். |
| சிங்கம் | ரோகபயம், எதிர்பாராத நன்மை, முயற்சி தாமதம், உறவினர் உதவி. |
| கன்னி | கூட்டு முயற்சி, மனோதைரியம், போஜன சுகம், தனதானிய சேர்க்கை. |
| துலாம் | போசன சுகக் குறைவு, அதிக செலவு, முயற்சி தாமதம், கடின வார்த்தை. |
| விருச்சிகம் | வெகுமானம், சயன சுகம், நண்பர்கள் சந்திப்பு, ஆழ்ந்த சிந்தை. |
| தனுசு | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, பிரயாண அலைச்சல், பிறருக்கு உதவுதல். |
| மகரம் | காரிய அனுகூலம், கலந்துரையாடல், குடும்ப மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | பெரியோரால் மதிக்கப்படுதல், எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி, போசன சுகம். |
| மீனம் | புதிய முயற்சி, குடும்பக் கவலை, ஆரோக்கியக் குறைவு, பிரயாணம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 130 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 60 |
| தக்காளி | 300 | 300 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | -- | 150 | -- |
| கரட் | 80 | 80 | 80 |
| பூசணி | 35 | 35 | 30 |
| புடோல் | 20 | 30 | 25 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 50 | 45-55 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | -- |
| பாகற்காய் | 60 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 20-40 | 50 | 40 |
| கரணைக் கிழங்கு | -- | -- | -- |
| பயிற்றங்காய் | 60 | 70 | 40 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 40 | 60 | 65 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 120 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 25 |

• தனியார் பல்கலைக்கழகம் • சர்வதேசப் பாடசாலை • தனியார் வைத்தியசாலை
• மருத்துவக் கல்லூரி • உல்லாச விடுதிகள் • தொடர்மாடி வீட்டுத் தொகுதி

# குடாநாட்டு அபிவிருத்திக்கு பல்வேறு துறைகளை ஆரம்பிக்க முதலீட்டுச் சபை விரைவில் நடவடிக்கை

## யாழ்.வந்த சபையின் விஷேட குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலுள்ள யாழ் மக்களின் முதலீட்டின் மூலம் குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகளை மேம்படுத்த விரைவில் முதலீட்டுச் சபை யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளதாக சபையின் உட்கட்டமைப்பு பிரதிப் பணிப்பாளர் நாயகம் எல்.டி. டிக்மன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் முதலீட்டு சபையை உருவாக்கி அபிவிருத்திப் பணிகளை மேம்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கு யாழிற்கு வருகைதந்த சபையின் விசேட குழுவினர் நேற்று யாழ். செயலகத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடாத்தினர். இதன்போதே சபையின் உட்கட்டமைப்பு பிரதிப் பணிப்பாளர் நாயகம் எல்.டி.டிக்மன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில், வடக்கின் வசந்தம் 180 நாட்கள் வேலைத்திட்டத்தின் ஊடாக யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு முதலீட்டுச் சபை திட்டமிட்டுள்ளது.

இதில் சர்வதேச பாடசாலை ஒன்றை ஆரம்பித்தல், தனியார் வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல், மருத்துவக் கல்லூரி, தனியார் பல்கலைக்கழகம் என்பவற்றை ஆரம்பித்தல், உல்லாச விடுதிகள், தொடர்மாடி வீட்டுத் தொகுதியை கட்டுதல் போன்ற வேலைத் திட்டங்கள் அடங்குகின்றன.

யாழ்.குடாநாட்டில் கடந்த 30 வருடங்களாக நடந்தது என்ன என்று எல்லோருக்கும் தெரியும். இலங்கையிலேயே யாழ்ப்பாணத்தில் தான் அதிக கல்விமான்கள் உருவாகியுள்ளனர். இவ்வாறு கல்வித்தரத்தில் முன்னிலையில் உள்ள யாழ்ப்பாண மக்கள் கடந்த கால அசாதாரண சூழ்நிலையால் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துள்ளனர்.

எமது பிரதான நோக்கமாக மீன்பிடி, விவசாயம் போன்ற யாழ் உற்பத்திகளை வெளிநாட்டு நிதி உதவிகள் மூலம் ஊக்குவிப்புச் செய்வதுதான் .

அத்துடன், தென்னிலங்கையைப் போன்று தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுதல் மற்றும் சர்வதேச பாடசால்லையை ஆரம்பித்து வெளிநாட்டு கல்வி வாய்ப்புக்களை யாழ்ப்பாண மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்படும்.

அத்துடன் உல்லாச விடுதிகள் அமைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் உல்லாசப் பிரயாணத் துறையை கட்டியெழுப்புதல் மற்றும் தொடர்மாடி வீட்டுத்தொகுதியை அமைத்து வெளிநாட்டில் உள்ள யாழ் . மக்கள் அவற்றை கொள்வனவு செய்யக்கூடிய வசதி ஏற்படுத்தல் போன்ற பணிகளை முதலீட்டு சபையால் மேற்கொள்ளப்படும்.

வெளிநாட்டில் உள்ள யாழ்.மக்கள் நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் நிச்சயம் தமது சொந்த இடங்களுக்கு வருவார்கள். அப்போது தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் அவர்களும் சொந்தமாக ஒரு வீட்டினைக் கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்பை முதலீட்டு சபை ஏற்படுத்தும்.

இவையெல்லாம் நடைபெறுமா என பலர் கேள்வியெழுப்பலாம். ஆனால் இத்திட்டங்கள் அனைத்தும் ஜனாதிபதியின் ஆலோசனையில் முதலீட்டு சபையால் விரைவில் மேற்கொள்ளப்படும். இதன் ஆரம்ப வேலைகள் தொடர்பில் இடங்களைத் தெரிவு செய்வதற்காக எம்மை முதலீட்டு சபையின் தலைவர் இங்கு அனுப்பியுள்ளார்.

நாங்கள் யாழ்.,அரச அதிபரின் உதவியுடன் பல இடங்களை அடையாளங் கண்டுள்ளோம் என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த முதலீட்டு சபையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மனித வள தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் கருத்துத் தெரிவிக்கையில், யாழ். குடாநாட்டல் முதலீட்டு சபையின் நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்படும்.

தற்பொழுது யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னேற்றம் கண்டுள்ளது. இதனால் முதலீட்டுசபையின் நடவடிக்கைகள் வெற்றியளிக்குமென நம்புகிறேன்.




எமது அலுவலகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும். ஒருமாத காலத்திற்குள் அடையாளம் கண்டுள்ளோம் என்றார். இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கருத்துத் தெரிவிக்கையில், முதலீட்டு சபையின் யாழ்.மாவட்டம் அபிவிருத்திக்கு பங்காற்ற முன்வந்துள்ளமையை வரவேற்கின்றோம். இதற்கமைய முதலீட்டு சபையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களின் வேலைத்திட்டங்களுக்கு நாம் இடங்களைத் தெரிவு செய்துகொடுத்துள்ளோம்.

இதில் சர்வதேச பாடசாலையை ஆரம்பிக்க வலிகாமம் பிரதேசத்தில் சுன்னாகம், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலையை அமைப்பதற்கு நல்லூர்,கோப்பாய் பிரதேச எல்லைக்குள் இடைப்பட்ட பகுதி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுவதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அப்பிரதேச அபிவிருத்திக்கு அது உதவும். காரைநகர் மற்றும் வடமராட்சி கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் உல்லாச விடுதிகள் அமைப்பதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது என்றார்.

முதலீட்டு சபையின் சார்பாக யாழ்.வந்த குழுவில் சபையின் உட்கட்டமைப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் எல்.டி.டிக்மன், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மனித வள தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், நிர்வாக நிறைவேற்று பணிப்பாளர் டபிள்யூ.பியசேன, தொழில்நுட்ப சேவை நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.பி. எப்.டி சில்வா,செயலக நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி ரேணுகா எம். விஜயக்கோன் மற்றும் சிவானி பென்ஜமின் ஆகியோர் உள்ளடங்குவர். (5)

# 19 பாடசாலைகளின் புனரமைப்புக்கு ரூ.100 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ரான் திட்டம் மூலம் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களை முடிபுறுத்த தேச உட்கட்டமைப்பு அமைச்சு 100 மில்லியன் ரூபாய் நிதியை வழங்கியுள்ளதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

''வடக்கின் வசந்தம்'' 180 நாட்கள் வேலைத் திட்டத்தின் ஊடாக யாழ். பாடசாலைகளின் அபிவிருத்திக்கு இந்நிதி ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிதியின் மூலம் ஏற்கனவே ரான் திட்டத்தில் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களில் முடிபுறாதுள்ள வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் கூறினார்.

இதில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 6 பாடசாலைகளும், வலிகாமம் கல்வி வலயத்தில் 4 பாடசாலைகளும் வடமராட்சி கல்வி வலயத்தில் 6 பாடசாலைகளும் தென்மராட்சி கல்வி வலயத்தில் 2 பாடசாலைகளும் தீவக கல்வி வலயத்தில் ஒரு பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவித்தார். (5)

# வடபிராந்திய போக்குவரத்து சபையின் 120 பஸ்கள் திருத்தியமைக்கப்பட்டு யாழில் சேவையில் ஈடுபடுத்தப்படும்

## யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகளை மேம்படுத்த 36.42 மில்லியன் ரூபாய் நிதியை தேச உட்கட்டமைப்பு அமைச்சு வழங்கியுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 180 நாட்களில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவையை மேம்படுத்த தேச உட்கட்டமைப்பு 36.42 மில்லியன் ரூபாய் நிதியை வழங்கியுள்ளது.

இதன்மூலம் வடபிராந்திய போக்குவரத்து சபையின் யாழ்.மாவட்டத்திலுள்ள மூன்று சாலைகளும் இணைந்து மேலதிகமாக 120 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும்.

இதில் கோண்டாவில் சாலையில் 30 பஸ்களும் பருத்தித்துறை சாலையில் 14 பஸ்களும் காரைநகர் சாலையில் 6 பஸ்களும் பற்றிகள்,ரயர்கள் பொருத்தப்பட்டு சிறு திருத்தங்களுக்குப் பின் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

அத்துடன் கோண்டாவில் சாலையில் 4 பஸ்களும் பருத்தித்துறை சாலையில் 2 பஸ்களும் காரைநகர் சாலையில் ஒரு பஸ்ஸும் மீள் திருத்தம் செய்யப்பட்டு சேவைக்கு விடப்படும். இவற்றுக்கு மேலதிகமாக வெளிமாவட்டங் களிலிருந்து 63 பஸ்கள் எடுத்துவரப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட பின்னர் யாழ். மாவட் டத்தின் மூன்று சாலைகளுக்கும் பகிர்ந்தளிக் கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும் என் றார்.

இதேவேளை இத்திட்டத்தில் கோண்டாவில் மற்றும் பருத்தித்துறை சாலைகளில் எரிபொருள் நிரப்பு பம்பிகளும் அமைக்கப்படவுள்ளது. (5)

## யாழ்.பல்கலைக்கு ரூ.43 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் சுகாதார நடவடிக்கைகள் மற்றும் விடுதிகளின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தில் ரூபாய் 43 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (5)

# பத்து வீதிகள் புனரமைப்புக்கு ரூ.43 மில்லியன் நிதி ஒதுக்கீடு

யாழ் .மாவட்டத்திலுள்ள மாகாண சபை வீதிகளை புனரமைக்க தேச உட்கட்டமைப்பு அமைச்சினால் 43 மில்லியன் ரூபாய் நிதி 'வடக்கின் வசந்தம்' நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் 'வடக்கின் வசந்தம்' நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 180 நாட்களில் யாழ். மாவட்டதிலுள்ள 10 வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதில் மீசாலை -வரணி வீதி, புங்குடுதீவு வைத்தியசாலை வீதி சங்கரத்தை குளக்கட்டு வீதி, மிருசுவில் -உசன் வீதி சுழிபுரம் பறாளை வீதி,பாலாவோடை - ஊரிவீதி, கச்சாய் வீதி, ஏழாலை கட்டுவன் வீதி, கோண்டாவில் - இருபாலை வீதி அல்லப் பிட்டி வீதி ஆகியவையே புனரமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப் புனரமைப்பு வேலைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்ளும் எனவும் யாழ். மாவட்ட செயலகம் வழி நடத்தும் எனவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் குறிப்பிட்டார். (5)

# வடக்கில் வசந்தம் திட்டத்தில் கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் புனரமைப்பு வேலைகளுக்கு வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தில் 17.6 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் 180 நாட்கள் வேலைத் திட்டத்தின் ஊடாக தேச உட்கட்டமைப்பு அமைச்சினால் இந் நிதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதில் வைத்தியசாலையில் குழந்தை விடுதிகள் மூன்று புனரமைக்கப்படவுள்ளதுடன் வாகனத் தரிப்பிடமும் அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (5)

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை சின்னத்துரை



உடுவிலைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சின்னத்துரை (02.07.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை -ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக்கணவரும் உதயசீலன் (University Pass Out) , அகிலன் (பிரான்ஸ்), சத்தியசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்லத்துரை நாகம்மா(இந்தியா),காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் தேவிமலர்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் கமலாம்பிகை,நல்லையா, காலஞ்சென்றவர்களான அருளானந்தம், நடராசா மற்றும் நித்தியானந்தம்,பீதாம்பரம்,பாக்கியராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுவீதி, உடுவில்,
சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்

வி/1035

## திருமதி கந்தையா பரிமளம்

நுணாவில் மேற்கு,சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா பரிமளம் (02.07.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா- பொன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான முத்தாச்சி, சின்னத்தங்கம், செல்லம்மா ஆகியோரின் சகோதரியும் மயில்வாகனம் (இளைப்பாறிய அதிபர், யாழ்.மட்டுவில் தெற்கு அ.நி.ச.க.பாடசாலை) சித்திரைசேனன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அழகநாயகி(ராணி), வனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்ற நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி

தகவல்
க. மயில்வாகனம் (மகன்)

வி/1036

## K.S.முத்துக்குமாரசாமி (சட்டத்தரணி)



புலோலி மேற்கு , தம்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சட்டத்தரணி கதிரித்தம்பி சிங்காரவேலு முத்துக்குமாரசாமி (02-07.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்காரவேலு-பொன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்டபுத்திரனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் இராசமாணிக்கம், மங்கையர்க்கரசி ,சண்முகநாதன் ஆகியோரின் சகோதரரும், சீதாலட்சுமியின் அன்புக் கணவரும், பிரபா, நிருபா, நிருபரணி,கௌரி , சிங்காரவேல் ஆகியோரின் தந்தையாரும் ஆழ்வாப்பிள்ளை தங்கராசாவின் அன்பு மாமனாரும் தனுசன் , கீர்த்தனா ,பிரவீணா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரி யைகள் நேற்று நடைபெற்றது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி மேற்கு,
தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்

வி/1037

# உரிமையாளருக்கு கிடைக்கப் பெறாமல் திரும்பிய வாகனப் பரிசோதனைக் கடிதங்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்திலிருந்து பதிவுத் தபா லில் அனுப்பிவைக்கப்பட்டு உரிய வர்கள் குறித்த முகவரியில் இல் லாத காரணத்தால் விநியோகிக் கப்படாத வாகனப் பரிசோதனைக் கடிதங்கள் யாழ்.மோட்டார் போக்கு வரத்து அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளது.

அவற்றின் உரிமையாளர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வாகனம் தொடர்பான ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் பிற்பகல் 2மணிக்கு பின்னர் யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கிடைக்கப் பெற்ற வாகன பரிசோதனைக் கடிதங்களில் குறிப்பிட்ட வாகன இலக்கமும் உரிமையாளரின் பெயரும் வருமாறு,

NP MF 5840-ரி.கோகுலன், NP HF 2116 -வி.இராஜலிங்கம் , NP JX 4925 -எஸ்.சிவராஜா, NP HO 8921 -ரி.கோபிதாசன், NP HV 7755 -என்.சசிகுமார், 70 8919 -எஸ்.சிதம்பரம், EN 7883 -வி. சிவகணேசநாதன், 43 2775-கே.மகேந்திரன், 8 2997 -எஸ்.கனகலிங் கம் .

HA 3033 -பி.தவராஜா, HT 1697 -பி.கனகேஸ்வரி, JT 7548-வி.அச்சுதன், HX 3828 - ஜெ.விஜயலக்ஷ்மி, JX 4824 - எஸ். அருணகிரிநாதன்,111 9311-கே.காந்தரூபன்,GD 5426-எஸ். ஜெயஸ்ரீதர்,JY 3699-எஸ்.மகாலிங்கம்,GS 9071-வி.சுரேந்திரன், JX 9603-வி.எம். ஞானகுமார், 28 4183 -கே.கந்தசாமி, EN 6966-எம்.ஜெகநேஸ்வரா, 11 1601, JB-0998-எஸ்.வனிதராஜ், 92 0904 -ரி.சுப்பிரமணியம், ME 2178-பி.டி.குமார்.

MI 4132, JT 2726-வி.இரவீந்திரன், JA 7129-ஆர். சுரேஸ்குமார், 130 8603-கே.நந்த ராஜா, 139 6242-பி.சுதர்சன், HJ 1936-எம்.கஜகரன், JB 1044-எஸ்.செல்வரஞ்சினி, JW 3968-எஸ். அருணாச்சலம், JK 2804-என்.கனகரத்தினம், 139 4187-டபிள்யூ. இருதயராஜா, 206 8925-எஸ்.சிவநேசன், 6 3598-எஸ். சிவகுருநாதன், JG 9452-என். மோகன், JH 9965-கே.சதீசன்-, 202 5812-எஸ்.சுதாகர், 21 8472 -கே. ஆனந்தா, 86 9335-எஸ்.தவகுமார், GD 2975-பி. சிவஞானசுந்தரம், 500 1185-கே.ஜெயபாலசிங்கம், 500 4197-வை.கிருஸ்ணபிள்ளை, 133 9991-டி.சுவேசிலிங்கம்.

JR 1599-வி. ஜெயந்தகுமார், 30 1770-பி.கருணானந்தன், 4 4413-எஸ்.குமாரவேல், HA 2752-ஜெ.ஜெயரஞ்சன், 37 4210-பி.கந்தசாமி, 8 6377-எஸ்.சண்முகராஜா,JD 1755-எஸ். பன்னீர்செல்வன் , 252 0182-ஏ. தவச்செல்வம், HD 6111-எம். ஜெகன், MI 6726-எஸ்.சொக்கலிங்கம், 100 8719-கே.நாகேந்திரன், JE 6537-எஸ்.நேசலிங்கம், 200 2143-ஆர்.சுதாஸ், 6 0963-வை.கணேசலிங்கம், HT 4530-ஜே.விஜயராஜா, 16 1285 ஏ.டி. சஞ்ஜீவன், HV 6693-எஸ்.சிறிதரன், GS 6515-எஸ்.சிவராசா, 16 1659-எம்.சி.நிசாந்தன்,MI 7683-பி.தவராசா, TO 1556-பி.தேவகுமார்.

GJ 4883- வி.ரி.ராஜ், 45 6861-வி.ராஜபூபதி, JU 7120-ரி.ஜெகதீஸ்வரன், GQ 2314-வி. கோபாலகிருஸ்ணன், 131 2413-எஸ்.ஜெயரூபன், JP 5690-வி. அன்ரனிபயஸ், 200 9739-எஸ்.என்.ராஜா,JB 6336-வி.ஜீபின் மேத்தா.

JC 5316-பி.ஜெயவரதன், 85 5374-எஸ். பாலச்சந்திரன், -MA 9725-வி.தர்மசேகரம், MP 6548-எம்.றொபேட்சன், 500 7612-என்.பிறேமாலதயகுமார், GE 5913 என்.குணசேகரம், MU 3638-ரி.ஜெயகுமார், RA 1889 - பொதுமுகாமையாளர், வடமராட்சி கிழக்கு மீனவர் கூட்டுறவு சங்கம்,

2 0318-பி.செல்வநாயகம், HA 5372-ஆர்.கதீபன், HC 9926 - வை.பார்த்தீபன், 36 5562-வி.ராசபூபதி, MD 4959-எஸ்.தர்மலிங்கம், MB 8706-கே.வாசன், JA 8657 பி.ரி.ஆர்.டொனால்ட்,105 5393-பி.குணநாயகி, HY 7389-எஸ் .சதானந்தன், 147 9406-எஸ். ஆறுமுகம், JI 3250-கே. விக்கினேஸ்வரன், 202 9737-கே.வசந்தன், MB 6522-வி.ஜெயமீரா, GB 3102-சி.ஜே.தேவி, HQ 5083-கே.மகாதேவன், HZ 3563-ரி.மகேஸ்வரன், HW 6261-என். ஜனகா.

GU 1283,HV 6977 பி.ராஜசுதன்,JH 4073 ரி.ரஜனி, 151-5313 ஏ.சிவபாதம், 86 9688- ஆர். ஜெகன்ராஜ்,500 4433 கே. செல்லையா, MC 6795 ஜி.யு.குமார், HI 6962 -பி.பாலமுருகன், MH 7839 சிவசுப்பிரமணியம்,

GS 9014-கே. கிருபராஜ், TG 9776 பி.சுகிதா 31 2205- எம். கணேஸ்வரன், JD 9098 -என். காந்தராஜா, MO 3620-ஏ.ரவீந்திரன் SB 6904 -ரி.கரன், HE 3753 ரி.துஸ்யந்தன்,MV 0723 ரி. பிரதிவிராஜ், HZ 4876 -எஸ். பானுகரன், 500 0685 எம். கணேஸ்வரி, 17 2605 பி.ஸ்ரனிஸ்பிரசாத், 5 9572 ஆர்.சிவகுமார்.

MG 1005 -கே.சிறிஸ்காந்தராசா, JR 1568 -ஐ.சுதர்சன், 500 0389-ரி.தம்பிராஜா, HZ 9467-ஏ.சந்திரமோகன், LD 1717-வி.நடராஜா, GZ 9609-எஸ்.ஜெயசுதன், JJ 2790-ரி.பிரகாஷ், JL 6483, MA 6516-கே.சுதர்சினி, 500 3149,கே.வேல்தஞ்சன்.

500 9184-எஸ்.பாலசுப்பிரமணியம், 28 2977-கே.இராமசாமி, JL 2907-எஸ்.விஜயதீபன், 25 4025-வி.தணிகாசலம், JB 7353-ஏ.எஸ்.செல்வபதி, HC 2361-செல்வவிநாயகம், 500 1378-கே.சிவராசா.

HV 1182-எஸ்.மத்தியூஸ், MP 7559-கே.வர தராஜன், GX 3584-வி.சிற்சபேசன், HQ 8540-எஸ். விஜயரத்தினம், MM 6312-ரி.தங்கவேல், MS 1031-என்.பாலச்சந்திரன் ,500 8647-எஸ்.இரவீந்திரகுமார், MP 1254-எஸ்.சபேசன், 28 9634-கே.ஜெயராஜ், JE 1731-சி.எஸ்.குமரன், HE 3860-கே. சுபாஸ்கரன், MC 9595-பி.சிவராணி, HW 9334-ஜே.கே.ஜெயஜீவ், MF 7795-எஸ்.அர்ச்சுனன், GH 6073-எஸ்.இருதயஜெனிராஜ்.

30 1551-ரி.ஜெயகுமார், HN 7417-எஸ்.ஏ.குமார், HV 0506-கே. ஆனந்தராஜ், JJ 5226-ஆர். சபாரத்தினம், HV5630-எவ்.எச். கனற், L2618-ஏ.சௌந்தரராஜன், 149 4806-பி.தீஸ்பரா, MF 7978-எம்.விமலச்சந்திரன், 150 0224 -எஸ்.விஜிதன், GE 7357 - எம்.மகாதேவன், HI 9018-கே. பாலகிருஸ்ணன், GZ 0109-ஐ. பரமேஸ்வரன், JL 5465-பி.சந்திரசேகரம், GU 2469-பி.பாலராஜன், HJ 3882-ஐ.ஜெனிஸ்ரன், 15 7202-பி. அப்புத்துரை, QB 5524-எம். முரளிகரன், 201 1586-எம்.முரளிகரன், 500 6785-எஸ்.சி.ஏ.பகிர், EY 3844-எஸ். மரியநாயகம், MV 8264-ஜி. சுரேஸ், 201 3256-ரி.சிந்துசன், GA 8837-பி.புவனா, MO 7826-எஸ்.தனேந்திரன், 50 8026-கே.வசந்தன், 500 2898-எஸ். சிவசம்பு, 500 0595-வி.அன்னலிங்கம்.

MW 4403-ஆர்.ரகு, MM 7577-கே.ரவிச்சந்திரன், JQ 2643-எஸ்.சிறிதரன், JY 3548-எஸ்.சிறித்மன், HH 6264-பி. அருண்குமார், 113 7049-வி. ராஜேந்திரன், 26 3284-வி.தவனேஸ்வரன், 8 4116, 500 9900, 200 4313, HH 5676, 43 1541,

(ஓ-7)

# நலன்புரி முகாம்களிலுள்ள ஆசிரிய பயிற்சி கலாசாலை மாணவர்கள் பயிற்சிகளை தொடர ஆவன செய்யவும்

## ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை

(கொழும்பு)

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளைச் சார்ந்த மாணவர்கள் பயிற்சிகளை தொடர்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மலையகத்திலுள்ள கலாசாலைகளில் இவர்கள் பயிற்சிகளை முன்னெடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் பெருந்தொகையான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை சார்ந்த மாணவ,மாணவியர் தங்கியுள்ளனர்.

இவர்களால் தமது பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும் இதனால் எதிர்காலமே கேள்விக்குறியாக இருப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத் திற்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவுக்கு கடித மூலம் சங்கம் அறிவித் துள்ளது.

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள இம் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவுமாறும் கோரியுள்ளதாக தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மலையகம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் இவர்களை இணைப்பதன் மூலம் கல்வியைத் தொடர வாய்ப்பளிக்க முடியுமென்று தெரிவித்துள்ளதாகவும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித் தார்.

(ஓ-6)

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியர்
செல்வி.சு.சுதந்தாதேவி அவர்களின் அன்புத்தந்தை

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

காலமான செய்தியறிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் ,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர்கள்.
யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

(2909)

## கோட்டக்கல்வி பணிப்பாளராக பதவியுயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலய அதிபர் சி.மாணிக்கராஜா இம் மாதம் முதலாம் திகதி முதல் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். (ஓ)

## சமூக கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலய முறைசாராக் கல்வி பிரிவின் அனுசரணையுடன் பாடசாலைக் கல்வியை விட்டு விலகியவர்களுக்கு சமூக கற்கைநெறித் திட்டத்தின் கீழ் மனை முகாமைத்துவம், சிங்கள மொழி, ஆங்கில மொழி, வீட்டுமின் இணைப்பு, கணணி கற்கை, கணணி திருத்துதல் (வன்பொருள்) ஆகிய கற்கைநெறிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கற்கை நெறிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இடைக் காடு மகாவித்தியாலயத்தில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்பப்படிவத்தை காலை 8.30-2.00 மணிவரை பாடசாலையில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் ஒருவர் ஒரு பயிற்சி நெறியை மட்டுமே தெரிவுசெய்யலாம் எனவும் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் 25 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளதாகவும் அதிபர் அ. அருந்தவநேசன் அறிவித்துள்ளார். (ஓ-6)

## முன்பள்ளி சிறார்களுக்கான "மலரும் மொட்டுகள்" செயல்திட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் பொது நூலகம் மற்றும் நூலகக் கிளைகள் முன்பள்ளி மாணவர்களது அறிவை மேம்படுத்தும் நோக்கில் ''மலரும் மொட்டுக்கள்'' என்ற செயற்திட்ட மொன்றை மாதம் தோறும் நடத்த உள்ளனர்.

இதில் நூலகர் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள் பாலர் பாடசாலைகளிற்கு நேரில் சென்று இத் திட்டத்தை செயற்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-29)




## நல்லூர் லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு வைபவம்

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 2009/2010 க்கான உத்தியோகத்தர்கள் பதவியேற்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண்ம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் லயன் ஐ.ஏ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுக்கு முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.இராகவன், லயன் சிமாட்டி ரஞ்சினி இராகவன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் 2009/2010 க்கான புதிய தலைவராக லயன் பி.கே.பி பாலஸங்கரும் செயலாளராக லயன் கே.ஜெயரட்ணமும் பொருளாளராக லயன் ஆர்.ஜனக்குமாரும் பதவியேற்கிறார்கள். (ஓ)

# கலாநிதி இ.முருகையனின் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் மூத்த கவிஞரும் தமிழ் அறிஞருமான கலாநிதி இ.முருகையனின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் உள்ள புதிய உயர் கல்லூரியில் குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அஞ்சலி உரைகளை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், கலாநிதி க.குணராசா கவிஞர் கல்வயல் குமாரசுவாமி, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், க.வேல்தஞ்சன், ஐ.சாந்தன், திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம், பேராசிரியர் வி.பி. சிவநாதன், க.தணிகாசலம் ஆகி யோரும் அத்துடன் கவிதாஞ்சலியை கவிஞர் த.ஜெயசீலன், அழ.பகீரதன், எஸ்.சிறிக்குமரன், கு.ரஜீவன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

இவ் அஞ்சலி நிகழ்வில் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவை கேட்டுக்கொண்டுள்ளது. (ஓ-4)

# வலிகிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சிவார செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு யூலை 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை வலிகிழக்கு பிரதேச சபையினால் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

◆ பிரதேசத்துக்குட்பட்ட மயாணங்கள், முதியோர் இல்லங்கள் போன்றவை சனசமூக நிலைய உறுப்பினர்களின் உதவியுடன் துப்புரவு செய்தல்.

◆ பிரதேசத்தில் பாதீனிய அழிப்பு நடவடிக்கையை தீவிரமாக மேற்கொள்ளல்.

◆ பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் கலைமதி ச.ச.நி உறுப்பினர்களுடன் இணைந்து இரத்ததானம் வழங்கல்.

◆ நிர்வாக எல்லைக்குட்பட்ட உணவுச் சாலைகளை பொதுச் சுகாதார பரிசோதகர் மூலம் பரிசோதனை செய்து நற்சான்றிதழ் வழங்கல்.

◆ கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க போட்டி நடாத்துதல்.

◆ தாய் சேய் பராமரிப்பு நிலையத்தில் கர்ப்பிணித்தாய்மாருக்கான சத்துணவு வழங்கல்.

◆ 2008, 2009 ஆம் ஆண்டில் இச் சபையில் பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை கௌரவித்தல்.

◆ நடமாடும் ஆயுர்வேத சேவையை இருபாலை, ஊரெழு, அச்செழு போன்ற இடங்களில் நடாத்துதல்.

◆ பாடசாலை மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்ளுல்.

◆ சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து டெங்கு நோய் ஒழிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

◆ நீர்வேலி திடலில் மாபெரும் மாட்டு வண்டி சவாரி நடாத்துதல்.

என்பன அத் திட்டங்களாகும். (ஓ-6)

# அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின்

## — நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு —

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 10 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் நடப்பு வருடத்துக்கான உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதில் தலைவராக யாழ். விலை மதிப்பீட்டு திணைக்களஅலுவலர் தி. உதயசூரியன், உப தலைவராக யாழ் வலயக் கல்வி அலுவலக அலுவர் தா.தர்மரட்ணம், செயலாளராக தெல்லிப்பழை பிரதேச செயலக அலுவலர் கு.சிவலிங்கம், உபசெயலாளராக யாழ். மாநகரசபை அலுவலர் திருமதி நந்தினி விஜயகுமாரன், பொருளாளராக யாழ் பிரதேச செயலக அலுவலர் செல்வி லூயிஸ் பத்மினி ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக நல்லூர் பிரதேச செயலக அலுவலர் திருமதி றூபா மோகன், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலர் திருமதி கு.சறோஜா, யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அலுவலர் எஸ் . கந்தசாமி, கரவெட்டி பிரதேச செயலக அலுவலர் சி.ஜெயசங்கர், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அலுவலர் செல்வி.கோபிகா, கோப்பாய் பிரதேச செயலக அலுவலர் எஸ். சுரேந்திரன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை அலுவலர் த. கணேசமூர்த்தி , தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக அலுவலர் க.சந்திரசேகரப்பிள்ளை, ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை அலுவலர் என். இராசநாயகம் , சுழிபுரம் வலிமேற்கு பிரதேச சபை அலுவலர் திருமதி சிவரூபி தவயோகராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-4)

## சத்திய சாயி சேவா நிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் போயா தின ஆன்மீக நிகழ்ச்சி 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் ஏனைய நிகழ்வுகளில் ஓம்காரம், வேதபாராயணம் தியானம், சாதனை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு நாராயண சேவை என்பன இடம் பெறவுள்ளது.

அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு குருபூர்ணிமா விசேட பஜனை இடம்பெறும். (ஓ)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

வட்டுமேற்கு செந்தில் முருகையா தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 க்கு நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கிரியைகள் 8 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. (ஓ-17)

## ஞானக்குழந்தை இல்லத்தின் 17 ஆவது வருடாந்த விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்லத்தின் 17ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி சுபாஜினி கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு.திருமதி கிருபாகரக் குருக்கள், சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் எஸ்.பி. காசிநாதன் , கல்விக்கழக பொறுப்பாளர் வ.கிருஷ்ணபிள்ளை, உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஷ்சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நீர்வேலியில் மாட்டு வண்டில் சவாரி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகிழக்கு பிரதேசசபை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாட்டுவண்டில் சவாரிப் போட்டியை நீர்வேலி சவாரித்திடலில் நடத்தவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் இது தொடர்பான மேலதிகமான தகவல்களை வலி கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் தலைமை அலுவலகத்திலோ அல்லது நீர்வேலி உப அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஓ)








நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மத்திய-மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 10 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் யாழ்.மரநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றுவதையும், அருகில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் சங்கத் தலைவர் இ.இரத்தினசிங்கம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

9-III

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

**மூன்றுதானியங்களுக்கு முதலில் முக்கியத்துவம்**

உணவுற்பத்தியின் அளவை அதிகரிக்க வேண்டும் என்ற நிலை வந்தபோது முதலில் மூன்று தானியப் பயிர்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் உலகளாவிய ரீதியில் அடிப்படை உணவுப் பொருளாகவும் அதிகமானவர்கள் உண்ணும் உணவாகவுமிருந்தவை தானியப் பயிர்களான நெல், கோதுமை, சோளம் ஆகியனவாகும்.

இம்மூன்று பயிர்களையும் இன விருத்தி செய்ய வேண்டிய நிலை தோன்றிற்று. வழக்கமாக பயிர் செய்யப்படும் உள்ளூர் இனங்கள் போதியளவு விளைச்சலை தரக் கூடியனவாக இருக்கவில்லை. உள்ளூர் இனங்களிலிருந்து ஒரு குறிப்பிட்டளவு விளைச்சலையே எதிர்பார்க்கக் கூடியதாகும்.

**உள்ளூர் இனங்கள் உயர் விளைச்சலை தரமுடியவில்லை**

அந்தந்த நாடுகளில் வளர்க்கப்பட்ட அவர் தம் பிரதேசத்திற்குரிய உள்ளூர் இனங்கள் அதியுச்சமாக ஒரு குறிப்பிட்ட விளைச்சலையே தரக்கூடிய வல்லமையைக் கொண்டிருந்தன. இன்றும் கொண்டிருக்கின்றன. இவ்வகை பயிரினங்களை பயிர் செய்வதனால் எந்த வகையிலும் விளைச்சலை அதிகரிக்க முடியாது. அப்படியொரு வல்லமை உள்ளூர் பயிரினங்களுக்கு இல்லை.

அப்படியென்றால் உயர் விளைச்சலை ஒரேயொரு நோக்கமாக கொண்ட பசுமைப் புரட்சியில் வெறுமனே உள்ளூர் இனங்களை வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாது என கண்டுபிடித்த போர்லாக் அவர்கள் தனது பிறப்புரிமையியல் பாண்டியத்தை, தாம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி பயிரினக் கலப்பினை (Crossing) செய்து அதன் மூலம் புதிய பயிர்வர்க்கங்களை உருவாக்க முடியும் என்று அறிவித்து அதனை செய்தும் காட்டினார்.

வெவ்வேறு பயிரினங்கள் கலக்கப்பட்டு புதிய இனங்களைத் தோற்றுவித்தால் மட்டுமே அதிகரித்த விளைச்சலை பெற முடியும் என நிரூபித்தார். இவ்வாறான கலப்பினப் பயிர்வகைகள் மூலமாக இனங்கலப்பதற்கு தெரிவு செய்யப்படும் இரு வேறு பயிர்வர்க்கங்களினதும் இயல்புகள் ஒன்று சேர வாய்ப்பு கிடைத்தது.

**வெவ்வேறு பயிர்வர்க்கங்களை கலந்து பெற்ற அதிகரித்த விளைச்சல் - தற்செயலான ஆனால் அரிய வரப்பிரசாதம்**

உலக நியதியை உற்றுப் பாருங்கள்! நல்ல நிகழ்வுகள், எண்ணங்கள் மறைக்கப்பட்டு, எதிர்மறையான, விரும்பத்தகாத இயல்புகளே இனக்கலப்பின் போது முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

மனிதனிலுள்ள உதாரணத்தை இதற்கு குறிப்பிட்டுக் கூறலாம். பொதுவாக ஆதிகா




லங்களில் நெருங்கிய சொந்தங்களுக்குள்ளேயே திருமணம் நடந்தேறும். கூட்டுக்குடும்ப வாழ்க்கையிலும் சரி அரச வம்ச ஆளுமைக்குள்ளும் சரி நெருங்கிய உறவு முறைகளுக்குள்ளேயுள்ள ஆண், பெண் இருவருக்கும் விரும்பியோ, விரும்பாமலோ திருமணம் செய்து வைக்கப்படும்.

சொத்தும் சந்ததியும் அந்தந்த குடும்பங்களின் வரையறையை விட்டு வெளியே போய் விடக்கூடாது என விடாப்பிடியாயிருந்ததால் இப்படியொரு முறைமை. இதனால் விபரீதங்களும் நடந்தன.

உறவுமுறைகளுக்குள் திருமணம் செய்விப்பதை தவிர்க்குமாறு விஞ்ஞான மருத்துவ உலகம் போதித்து வருவதில் என்றுமே அர்த்தமுண்டு. ஆனால் உலக போதனையை வெறுத்த அக்காலத்து மனிதர்களுக்கு உறவு முறைக்குள் திருமணம் செய்வது விருப்புடையதாக இருந்தது. அதாவது அவர்கள் தேடிய சொத்து பங்குபோட்டு சிதைந்து போகக் கூடாது என்பதற்காக எனலாம்.

அவ்வாறு சிதைவுறுவதையும் தமது ஆட்சியதிகாரமுட்பட சொத்துக்கள், கௌரவம், மற்றும் தமது சாதிக்குரிய அடையாளம் என்பன அழிந்தொழிய எவரும் விரும்பவில்லை. இன்றும் இது ஆங்காங்கே இருப்பதற்கான அடையாளங்களும் இருக்கத்தான் செய்கின்றது.

மாறாக, உறவுக்களுக்குள் திருமணஞ் செய்வதால் பிறக்கும் பிள்ளைகளில் பரம்பரைக்குரிய நோய்கள் முதன்மைப்படுத்தப்பட்டு அவர் தம் வாழ்வில் பல இன்னல்களை அடைவதை அவதானிக்கலாம். குறிப்பிட்ட பரம்பரை வியாதிகள் பெற்றோர்களில் வெளிக்காட்டப்படாதிருந்தாலும் அவை பிள்ளைகளில் வெளிக் கொணரப்பட்டு அங்கவீனம் உட்பட இருக்கும் மிச்ச சொச்ச பரம்பரை வியாதிகளுடன் பிள்ளை பிறந்து இவ்வுலகில் அவதியுறும் நிலைக்கு தள்ளப்பட்டு விடுகின்றது.

விஞ்ஞானம் அகிலம் முழுவதையும் சல்லடை போட்டு தேடும் இக்காலத்திலும் மருத்துவ வல்லுனர்களின் சொல்லைச் செவிமடுக்காது இந்த வரட்டுப் பிடியுடன் சம்பந்தம் கலப்பவர்களுக்கு இது சமர்ப்பணம்.

இனியொரு நலமிழந்த சந்ததியை உருவாக்கி விடாதீர்கள்!

பரம்பரையில் சம்பந்தமில்லாத இரு குடும்பங்களுக்கிடையே கை நனைக்கும் போது இருவேறுபட்ட குடும்ப பெற்றோர்களுக்கிடையிலான பரம்பரையலகுகள் கலப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் புது இயல்புகளுடன் பிள்ளை பிறக்கும் சாத்தியம் உண்டல்லவா! அவர்கள் சாதனையாளர்களாக உருவெடுக்க வாய்ப்பு உண்டல்லவா!

இயற்கையின் நியதியை மாற்ற முடியுமா? இதையே எதிர் பார்த்து பசுமைப் புரட்சியின் ஆரம்ப நிலையில் பயிர் ஒன்றின் சம்பந்தமில்லாத வகைகளுக்குள் இனக் கலப்பு செய்ய பசுமை விஞ்ஞானிகள் முனைந்தனர். கலத்தல் சரியானதால் புதிய பயிர்வர்க்கங்கள் உருவாக்கப்பட்டன. இக் கலப்பு விளைச்சலை பல மடங்கால் அதிகரிப்பதற்கு



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

உதவியது. பசுமை விஞ்ஞானிகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஆனால் பசுமையினுள் சுமையொன்று பொதிந்திருக்கின்றது. என்பதை துலாம் பாரமாக கோடிட்டு காட்டியதை ஆய்வாளர்கள் கவனத்திற் கெடுத்துவிடவில்லை. வெற்றிப் பெருமிதம் எல்லாவற்றையும், குறிப்பாக குறைபாடுகளை மறக்கப் பண்ணி விட்டது. இங்கேதான் பிரச்சினை ஆரம்ப மானது. இந்தப் பிரச்சினையின் விளைவை இப்போதும் நாம் அனுபவிக்கின்றோம். விபரமாக இன்னொரு படிநிலையில் அலசுவோம்.

**ஆய்வுக்காக உலக நிறுவனங்கள் உருவான விந்தை**

உயரிய விளைச்சல் ஒன்றே அச்சமயத்தில் இட்ட குறிக்கோள். வெவ்வேறு எதுவிதத்திலும் சம்பந்தமில்லாத பயிர்வகைகள் சம்பந்தத்தில் கலக்கப்பட வேண்டிய தேவை எழுந்த போது ஆராய்ச்சி என்ற ஒன்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆராய்ச்சியை முடுக்கி விடுவதற்கு உலகளாவிய ரீதியில் அதற்குரிய ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவையும் எழுந்தது.

(தொடரும்)

# யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்தியில் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தின் பங்களிப்பு

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு செயல் முறைப் பயிற்சி வழங்குவதைப் பிரதான தொழிற்பாடாகக் கொண்டு இயங்குகிறது. அத்துடன் பாடசாலை, பல்கலைக்கழக, தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் இந்நிலையத்திலிருந்து விவசாயம் சார் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதுடன், செயல்முறைப் பயிற்சிகளிலும் கலந்து கொள்கிறார்கள். இரண்டு, மூன்று வருடங்களுக்கொரு தடவை விவசாயக் கண்காட்சியும் நடத்தப்பட்டு வருகின்றது. மாவட்டத்தின் சேதனப் பயிர்ச்செய்கை முறைமையை ஊக்குவிக்கும் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதில் யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

**பயிற்சிகள்**

இம் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு சேவையை முன்னெடுப்பதற்கு பதினான்கு விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளுக்கும் பொறுப்பாக இயங்கும் விவசாயப் போதனாசிரியர்கள், தங்கள் பகுதி விவசாயிகள் எதிர் கொள்ளும் விவசாய சார் தொழில்நுட்ப பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றில் தீர்வுகாண வேண்டியவற்றை மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

இதனடிப்படையில் காலாண்டு, அரையாண்டு என திட்டங்கள் வகுக்கப்பட்டு பொருத்தமான பயிற்சித் துண்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டு செயல்முறையுடன் கூடிய பயிற்சிகள் இங்கு வழங்கப்படுவது சிறப்பம்சமாகும். இதனுடன் புதிய பயிற் செய்கைத் தொழில்நுட்பங்கள், புதிய இனங்கள், புதிய சிபாரிசுகள் போன்றவற்றை விவசாயிகளின் விளைநிலங்களுக்கு எடுத்துச் செல்லுமுகமாக மாதிரித் துண்டங்கள், அவதானிப்புத் துண்டங்கள் என்பன ஸ்தாபிக்கப்பட்டு அவற்றிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக அடர்த்தியான வாழைச் செய்கை, வீதி முறைப் பயிர்ச் செய்கை, காளான் வளர்ப்பு என்பனவற்றை குறிப்பிடலாம்.

இப் பயிற்சி நெறிகளுடன் அரச நிதி, உள்ளூர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், U.N.D.P உணவு விவசாய ஸ்தாபனம் போன்ற நிறுவனங்களின் நிதி அனுசரணையுடன் மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும் விவசாயத் திட்டங்களில் பயனாளிகளாக உள்வாங்கப்படும் விவசாயிகள், பகுதி நேர விவசாயிகள், மற்றும் பயனடையக் கூடிய ஏனையோருக்கான உரிய விவசாய பயிற்சி நெறிகள் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக உரிய ஒழுங்கு முறையில் செயன்முறையுடன் நடாத்தப்பட்டு வருவது தற்காலத் தேவைகளை ஈடு செய்யும் முக்கிய விடயமாகும்.

**அடர்த்தியான வாழைச் செய்கை**

இம் முறையில் ஒரு பரம்பரை அல்லது ஆகக் கூடியது 2 பரம்பரையே பராமரிக்கப் படும். வரிசைகளுக்கிடையே மூன்று மீற்றரும், வரிசையில் இரு மரங்களுக்கிடையே ஒரு மீற்றர் இடைவெளியிலும் நடுகை செய்யப் படுகின்றது. ஒரு ஏக்கரில் 1200 வாழைக்



குட்டிகள் வரையில் நடுகை செய்யலாம். நன்கு வளமிக்க மண் உள்ள தோட்டங்களில் இரு மரங்களுக்கிடையே உள்ள இடைவெளியை 1.5 மீற்றர் வரை அதிகரிக்கக் கூடியதாக உள்ளது.

வரிசைகள் இயலுமானவரை கிழக்கு - மேற்காக இருத்தல் நன்று. நடுகைக் குழிகள் 45X45X45 செ.மீ. (1.5X1.5X1.5 அடி) ஆக இருத்தல் போதுமானது. குழிகள் கூட்டெரு அல்லது உக்கிய மாட்டெருவுடன் சம அளவில் மேல் மண் கலந்து நிரப்பப்படுகிறது.

நோயற்றதும், வீரியமுமான ஒரே வயதுடைய குட்டிகளை (உயரம் 2-2.5 அடி) நடுகைக்கு தெரிவு செய்ய வேண்டும். அதிக விளைவைப் பெறுவதற்கு ஒழுங்காக நீர்ப்பாசனம் செய்வதுடன், இம் முறைக்கென விசேடமாக சிபாரிசு செய்யப்பட்டுள்ள பசளை அளவுகளை உரிய கால இடைவெளியில் பிரயோகிக்க வேண்டும். கப்பல், கதலி, இதரை, மொந்தன் ஆகிய இனங்கள் நடுகை செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

அறுவடை செய்யப்பட்ட குலை ஒன்றின் சராசரி நிறை 17. கி.கி. ஆகும். எனவே ஒரு ஏக்கரிலிருந்து ஒரு வருடத்திற்கு அண்ணளவாக 20 ஆயிரம் கி.கி வாழைப்பழத்தினை விளைவாகப் பெறமுடியும்.

**வீதி முறைப் பயிர்ச் செய்கை**

இப்பயிர்ச் செய்கை முறை சாலை முறைப் பயிர்ச் செய்கை அல்லது வேலிகளுக்கிடையேயான ஊடுபயிர்ச் செய்கை எனவும் அழைக்கப்படுகின்றது. ஆழமான வேர்த்தொகுதி, விரைவான வளர்ச்சி, கத்தரிக்கும் போது மீண்டும் மீண்டும் வளருதல், அடிக்கட்டையிலிருந்து வீரியமாக வளரும் தன்மை, அதிகளவான இலை உற்பத்தி போன்ற இயல்புகளை வீதி முறைப் பயிர்ச் செய்கையில் வேலி மரங்கள் கொண்டிருக்க வேண்டும். இத்தாவரம் அவரைப் பயிராகவும் இருக்க வேண்டுமாதலால் கிளிறிசிடியா, இப்பில் இப்பில் என்பன சிறப்பானவை. விவசாய பயிற்சி நிலையப் பண்ணையில் கிளிறி சிடியா பயன்படுத்தப் படுகின்றது. இது வளி மண்டல நைதரசனை மண்ணில் பதிக்கிகிறது. வரிசைக்கிடையில் ஐந்து மீற்றர் இடைவெளியும், வரிசையில் மரங்களிற்கிடையே அரை மீற்றர் இடைவெளியுமிருக்கத்தக்கதாக வேலிகள் ஸ்தா



பிக்கப்படல் வேண்டும். விதை மூலம் உருவாக்கப்பட்ட நாற்றுக்களின் வேர் ஆழமாக செல்வதால் நாற்றுக்களை நடுகைப் பொருளாக தெரிவு செய்தல் உகந்ததாகும்.

நிழலை விரும்பி வளரும் கோப்பி, அன்னாசி, இஞ்சி, மஞ்சள் போன்ற பயிர்களும் வெப்பநிலை அதிகமாகவிருக்கும் ஒவ்வாத காலங்களில் தக்காளி, கறிமிளகாய், மிளகாய், கோவா, லீக்ஸ் போன்ற மரக்கறிப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன. பயிர்கள் செய்கை பண்ணப்படும் போது வேலியிலுள்ள மரக்கிளைகள் பகுதி பகுதியாக மூன்று தடவைகள் வரை கத்தரிக்கப்படும். கத்தரிக்கப்பட்ட கிளைகள்

**S.V. லூக்காஸ்**
பண்ணை முகாமையாளர்
பிரதி விவசாயப்பணிப்பாளர் விரிவாக்க அலுவலகம்
யாழ்ப்பாணம்

பயிர்களுக்கிடையில் மூடுபடையாக பயன்படுத்தப்படுகின்றது. இதனால் களைகள் கட்டுப்படுத்தப்படுவதோடு நிலத்திலிருந்து நீர் ஆவியாதல் குறைக்கப்படுவதனால் நீர்ப்பாசனத்தின் அளவு குறைக்கப்படுகின்றது. இதற்கும் மேலாக இடப்படும் நைதரசனை அதிகளவில் கொண்ட இலைகள் இயற்கைப் பசளையாகின்றது.

(தொடரும்)

# கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்குமான பாலமாக 13 ஆவது திருத்த சட்டம் அமையும்

## யாழ்.மேல் நீதிபதி இ.த.விக்னராஜா

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 2ஆம் திகதி கல்லூரி அதிபர் நோயல் எ.விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி கௌரவ இ.த.விக்னராஜா ஆற்றிய உரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. (ஆ-ர்)**



இலங்கையிலே பல வகையான முகாமை களின்கீழ் நடைபெறும் கல்லூரிகள் உள்ளன. அரசாங்கத்தினாலும், முகாமைத்துவ சபை களினாலும், திருச்சபைகளான 'Mission' களாலும் அவை நடத்தப்படுகின்றன. யாழ்ப் பாணக் கல்லூரி அதன் வரலாற்று சிறப்பி னாலும், நல்ல கீர்த்தி மிக்க கல்விப் போத னையாலும் சீர் சிறப்பு வாய்ந்த நல்லொ ழுக்கப் பண்புகளாலும் பெருமை கொள்ள போதிய காரணமுண்டு.

நல்லொழுக்கத்தை மனதார விரும்பி ஆராதித்து பெருமைகொள்ளும் போதே அது தோற்றத் தகுந்த தராதரமுள்ள நல்லொ ழுக்கமாக மிளிரும். அல்லாவிடின் நல்லொ ழுக்கம் என்பது வெறும் பயப் பிராந்தியத்தை உருவாக்குவதாக இருக்குமேயன்றி வேறு எதுவும் அல்ல. அதிபரின் அறிக்கையின் மூலம் இந்தக் கல்லூரியின் மாணவர்களான நீங்கள் கல்வியிலே திறமைகாட்டியுள்ளதுடன் ஒருவருக்கொருவர் போட்டியாக தோற்றத் தக்க சித்தி அடைவுகளைப் பெற்றுள்ளீர்கள் என்பது புலனாகிறது. உங்கள் கைகளில் நீங்கள் ஏந்தப் போகும் இந்தப் பரிசுகள் நீங்கள் கஷ்டமான சூழ்நிலைகளில் இருக்கும் பொழுது உங்களுக்கு நல்ல மன உற்சாகத் தையும் நம்பிக்கையையும் தருவனவாக அமையும்.

உங்களுடைய அதிபர் அவர்கள் தமது அறிக்கையிலே பெற்றோர்களினதும் மாண வர்களினதும் முழுச் சமுதாயத்தினதும் நடக் கையிலே ஏற்பட்டு உள்ள கலாசார பிறழ்வு களாலும் மற்றும் மதம்சார் விழுமியங்களின் சீரழிவுகளாலும் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற் றிக் குறிப்பிட்டார். மகாத்மாகாந்தி போதித்த உண்மையையே பேசும் துணிவு, பொறுமை காத்தல், ஒருவர் மற்றவருக்கு விட்டுக் கொடுத் தல் போன்ற நற்பண்புகளைப் பேணி நடக் கக் கற்றுக்கொள்ள வேண்டும். மனிதராகப் பிறந்த ஆண், பெண், குழந்தைகள் எல்லோ ருமே இந்த உலகத்தில் ஒருவருக்கொருவர் அன்பு காட்டி நேசிக்க வேண்டியவர்கள் ஆவோம். இவ்வாறு நாம் முயற்சித்தால் கடவுள் எங்களை அந்த வழியில் நடக்க அருள்பாலிப்பார். அவ்வாறாயின் இங்கே உள்ள குழந்தைகள் வளர்ந்து வருவதற்கு முன்பாக நாங்களும் பெரும் தன்மை கொண் டவர்களாக வளர்ச்சி அடைவோம். நாங்கள் இனபேதம் சார்ந்த தவறான எண்ணங் களையும் நடவடிக்கைகளையும் மறந்து கை விட்டு நடக்க முழுமனதுடன் கற்றுக்கொள் வோமானால் நமது நாடான இலங்கை அடுத்து வரும் சில ஆண்டுகளுக்குள் பெரு மைக்கு உரிய நாடாகப் பரிணமிக்கும். உலக மும் உங்களை மதித்து எங்களைப் பின்பற்றி நடந்து கொள்ளத் தொடங்கிவிடும். உங்களை எவரும் வெறுத்தால் அதற்காகக் கவலைப் படாதீர்கள். அப்படி வெறுப்போர் ஒறுப்போர் மீதும் நீங்கள் பதிலுக்கு அன்பு காட்ட வேண் டும். அப்பொழுது அவர்கள் திருந்தி பதிலுக்கு உங்கள் மீது அன்பு செலுத்துவார்கள். மற்ற வர்கள் பொய் பேசுவதனை பற்றிப் பொருட் படுத்தாமல் நீங்கள் எப்பொழுதும் உண் மையே பேசி உண்மையாக நடவுங்கள். அப் பொழுது எல்லாம் நன்மையாக நடை பெறும்.

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் இலங்கை நாட்டைப் பாதுகாத்து வந்த எங்களுடைய உயர்வான கலாசாரங்களும் பண்பாடுகளும் தாக்கத்திற்கு உட்பட்டுச் சரி வுற்றுப் போனது ஒரு பெரும் துர்ப்பாக்கியம் ஆகும். எங்கள் உயர் கல்விப் பேற்றிலே ஏற்பட்ட போதாமையும் வீழ்ச்சியும் அத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. எங்கள் பழம் பெரும் கலாசாரப் பண்பாடுகள் தொடர்ந்து பேணப்பட்டு வந்திருந்தால் நாங்கள் இன்று எங்கும் காணக்கூடியதாக உள்ள பேராசைத்தனங்கள், சுயநலத் தன்மைகள் எல்லாம் மேலோங்கி நாட்டின் முன்னேற் றத்தை பின்தள்ளி விட்டிருக்கமாட்டாது.

மேற்கத்தைய உலக பண்பாட்டு வளர்ச் சிகள் அடங்கலாக எங்கள் மாணவர்களுக்கு உண்மையைக் கண்டு அறிந்து நற்பண் புகளை மனதில் வளர்க்கக் கூடிய உயர்ந்த சமய தத்துவங்களையும் கற்றறிந்து எந்த விதத் தனிப்பட்ட முயற்சியோ நேரடிச் செயற் பாடே இன்றி எமது நாட்டை முன்னேற்றக் கூடிய உத்வேகத்தையும் சாதகமான சூழ் நிலையையும் உருவாக்கக்கூடிய முழுமை யான திட்டத்தை வகுக்க வேண்டியது காலத் தின் தேவையாகும். நேரடியாகச் செய்து அடைய முடியாததை மறைமுகமான சரியான முயற்சியால் செய்து உரிய பயனைப் பெற முடியும் என்பதும் அனுபவ ரீதியாகக் காணப்பட்ட ஒன்றாகும். எல்லா ஆத்மீகத் தேடல்களும் ஒன்றே. அதனை எவர் செய் தாலும் எங்கிருந்து செய்தாலும் அதனை இறைவன் ஆசீர்வதித்து அருள்புரிவார்.

புகழ்பூத்த *முன்நாள் பிரதம நீதியரசர் களுள் ஒருவரான எம்.சீ. சன்சோணி* அவர்கள் 1965 ஆம் ஆண்டிலே கொழும்பு சுதந்திரச் சதுக்கத்திலே நடந்த 'Law Day' எனப்படும் சட்ட தினத்திலே கூறியது நாம் எல்லோரும் மனத்திலே வைத்திருக்கத்தக்க ஒன்றாகும். "எங்கள் சமுதாயம் ஒரு ஒழுக்கம் உள்ள சமுதாயமாக அமைய நாங்கள் வழிசெய்ய வேண்டும். அங்கே ஒவ்வொரு பிரஜையும் சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் பணிந்து நடப்பவராகத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாங் கள் சுதந்திரத்தை அனுபவக்கலாம் என்றார். மேலும்அவர், "மக்கள் உயர்ந்த இலட்சியம் கொண்டவர்களாகி அவர்கள் மீது கட்டாயப் படுத்தி திணிக்க முடியாதவையான சமயச் சட்டங்களையும் கோட்பாடுகளையும் நல் லொழுக்கங்களையும் பேணி பணிவாக நடக்கமுயல வேண்டும். அப்பொழுதுதான் அந்த மக்கள் நாகரீகத்தின் உயர் தரத்தை அடைய முடியும்" என்றார். **சீசரோ (Cicero)** என்ற உரோமனிய அறிஞர். 2000 அண்டுகளுக்கு முன்பு கூறினார் "நாங்கள் எல்லோரும் சட்டத்திற்கு அடிமையாக இருக் கின்றோம். ஏனெனில் நாங்கள் சுதந்திரமாக இருக்க விரும்புகின்றோம்'' சில வருடங் களுக்கு முன்பு ஒரு இந்திய நீதிபதி, "விடுதலை என்ற நடனத்தை சட்டம் ஒழுங்கு என்ற மேடை யிலே மட்டும்தான் ஆடமுடியும்" என்றுகூறினார். இவற்றை நான் இங்கே கூறுவது இந்தக் கால கட்டத்திற்கு அவை பொருத்தமானவை என்று நான் கருதுவ தனாலாகும்.

எனது இன்றைய வெளிப்படுத்தல்களின் முக்கியகுறிக்கோள் "*நாட்டை கட்டி எழுப்புதல்*" என்ற பொதுக்கொள்கையை பரம்பலுறச் செய்து முன்னுரிமை பெற வைப்பதாகும். நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு முற்று முழு தான வெளிப்படையான ஜனநாயக விழு மியங்களுடனான மக்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். இவ்வாறு சகல பிரிவு மக்களும் அர்த்தமுள்ள வகையில் அரச செயற்பாட்டில் ஈடுபடுவதன்மூலமே சகல மக்களினதும் அரசுடனான தொடர்பு பலமுள் ளதாக அமையும்.

"இலங்கையர் எல்லோரும் ஒரே சமனான வர்கள்'' என்றோ அல்லது நாட்டைக்கட்டி எழுப்புதல் எமது நாட்டில் வலுப்பெற தவறியமைக்கு நவீன இந்தியாவின் சுதந்திரத் தின் பிதாமகர்களான **மகாத்மா காந்தியும் ஜவஹர்லால் நேருவும்** ஜனநாயகம் பற்றிக் கூறியவற்றை நாம் நன்கு பரிபூரணமாக விளங்கிக் கொள்ளாமையே காரணமாகும். காந்தி அண்ணலைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் என்பது, ''எல்லோருடைய நன் மைக்காகவும் பல்வேறுபட்ட பிரிவு மக்களி னதும் பௌதீக பொருளாதார ஆன்மீக மூல வளங்களையும் ஒன்றிணைத்துச் செயற்பட வைப்பதான ஒரு கலையும் அறிவியலும் ஆகும்'' இது காந்தி, நேரு, தாகூர் சிந்னை கள் என்ற தலைப்பிலே பிரிஜ் கிஷோர் கயால் என்பவர் எழுதி புதுடில்லியில் வெளியிடப்பட்ட நூலில் இருந்து எடுக்கப்பட்டது.-(Thoughts of Gandhi, Nehru and Tagore by Brij Kishore Gayal, CBS Publishers and Distributors, New Delhi)

இந்த நாட்டிலே உள்ள நல்ல ஆர்வம் கொண்ட மனத்தினர் அனைவரும் விரும் புவது நாட்டைக்கட்டியெழுப்புதல் என்ற செயற்பாட்டிலே தோன்றும் சவால்களை எதிர்கொள்வதில் பல்வேறு பிரிவினரான முழு இலங்கையர்களின் கவனமும் ஒன்றுபட்டு பணியாற்றவேண்டும் என்பதாகும். அந்தக் கருத்து உருப்பெற்று நீடித்து நின்று நிலைக் கக் கூடிய சமாதானம் வரவேண்டும் என்றால் அதற்கான முறையான மனோவியல் ரீதியான கலந்துரையாடல்கள் எல்லாச் சமுதாயங் களும் திறந்த மனதுடன் ஒன்றிணைந்து நடத்தப்படுவதாக இருக்கவேண்டும். அப்பொ முது தான் அர்த்தமுள்ள நிலையான சமாதா னம் இந்த நல்ல நாட்டிலே உதிக்கும். தற்போ தைய அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் மட்டும் எல்லா ஆதங்கங்களையும் ஏற்றத்தாழ்வு களையும் தீர்த்துவிட உதவிடுமா? என்று நாட் டில் பல பாகங்களிலும் வசிக்கும் நாட்டுப் பற்றாளர்கள் சிந்திக்கிறார்கள்.

எங்களுடைய *முன்நாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா* அவர்கள் 24.10.2007 ஆம் திகதி நிகழ்த்திய உரையொன்றின் சில பகுதி களை இந்த விடயம் தொடர்பாக கவனத்திலே கொள்வது பொருந்தும் என்று நினைக்கிறேன். சமாதானம் மீண்டும் ஏற்பட வைப்பதற்கு உயர்மட்டத்திலே சகல பிரிவு மக்களின் அக்க றைகளையும் உணர்வு பூர்வமாகக் கணக் கிலே எடுப்பது அவசியமாகும். இந்தப் பிராந் தியத்திலே பகைமை வெடிக்க அடிப்படையாக அமைந்த மக்களின் மனக்குறையை முதலில் அடையாளம் காண்பது முக்கியமான தாகும். சட்டத்தோடும் அரசியல் யாப்போடும் சம்பந் தப்பட்ட அந்தக் குறைபாடுகளில் அனேகமா னவை ஏற்கனவே 1987 ஆம் ஆண்டின் 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத் தினால் தீர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. துர்அதிர்ஷ்டவசமாக அந்த யாப்புத் திருத்தம் வந்து 20 ஆண்டுகள் கடந்தும் கூட அது இந்தப் பிராந்தியத்திலே முழுமூச்சாக செயற்படுத்தப்படாமல் உள்ளது. அப்படி அது செயற்படுத்தப்பட்டிருந்தால் அது இந்தப் பிராந்தியத்தின் சமூக பொருளாதார நன் முன்னேற்றத்திற்கு வகைசெய்து இருக்கும்.

இங்கு ஒரு சம்பவத்தைக் கூறுவது பொருத் தமாக இருக்கும் என்று நான் நினைக்கின் றேன். சென்ற வாரம் ஒரு சமூக ஒன்று கூடல் நிகழ்ச்சியில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களை நான் சந்திக்க நேர்ந்த பொழுது அவர் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் நீதிமன்ற கட்டடத் தொகுதியைத் திறப்பது சம்பந்தமாகவும் எங்கள் வேலைத் திட்டங்கள் பற்றியும் ஆவலோடு வினவினார். அங்கு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்திற்கும் அரசாங்கத் தின் எல்லா உதவிகளையும் தருவதாக உறுதியளித்ததுடன் நாட்டின் இன்றைய பரிதாபகரமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ள அனைத்திற்கும் முழுமையான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று அவர் கூறினார். அந்த விடயம் தொடர்பாக பேசும் பொழுது அவர் ''*நாங்கள் 13 ஆம் திருத்தத்துடன் மேலும் ஒன்றுடன் (Plus One) அதாவது நல் லெண்ணச் செயற்பாடாகவும் வேற் றுமைகளைத் தீர்த்து வைப்பதற்கான ஆவலை வெளிக்காட்டுவதாகவும் வழங்க வேண்டும்*" என்று கூறினார். அரசியல் நிபுணர் களுடனும் இராஜதந்திர மட்டத்திலான மற்றும் நாட்டுத் தலைவர்களுக்கிடையிலான ஆழ மான கலந்துரையாடல்களில் வெளிப்பட்ட மேற்படியான ஒரு சொற்றொடரை அவர் பாதித்து இருக்கலாம் என்று நான் நம்புகின்றேன்.

13 ஆம் யாப்புத் திருத்தச் சட்டம் கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையிலே ஒரு பாலமாக அமையலாம் என்று நான் நம்புகின்றேன். *மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள்(Plus One)* என்று குறிப்பிட்டது தொடர்பாக சிந்தித்தபோது அது அரசாங்கத் தினதும் மக்களினதும் வாழ்க்கைத் தரத்திலே ஒரு புதிய அம்சமாக அமையலாம் என்று நான் நம்புகின்றேன். எங்கள் அரசியல் யாப்பிலே ஏற்படுத்தப்பட இருக்கும் புதிய திருத்தம் இந்த நாட்டிலே உள்ள எல்லா மக்க ளினதும் ஜனநாயக எதிர்பார்ப்புகளை நிறை வேற்றுவதாக இருக்கவேண்டும். அது தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் ஒரு சாதனமாகி அரசியல் என்ற உடலிலே ஏற்பட்ட பழைய காயங்களைச் சுகப்படுத்தும் அரு மருந்தாக அமைய வேண்டும்.

அந்தத் திருத்தப்பட்ட யாப்பு மக்களை மக் களுடன் இசைந்திருக்கச் செய்யவும் மக்களும் அரசாங்கத்துடன் இணைந்திருக்கவும் செய் யும் ஓர் நல்லிணக்க ஒப்பந்தமாகவும் அமைய வேண்டும்.

அந்த "*மேலும் ஒன்று*" என்று கூறப்பட்டது ஒரு இறையாண்மை கொண்ட நாட்டிலே பின்வரும் நல்லனவற்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்று விரும்புகின்றேன். மனித மான்மியம், சமநிலையை அடைதல், இனப் பாகுபாடுகள் அற்ற முன்னேற்றம், அரசியல் யாப்புக்கே முதன்மை இடம், சட்ட முறைப்படியான ஆட்சி, அதற்கு மாறுபாடாக உள்ளவை அற்றுப்போதல், சட்டத்தினால் ஆக்கப்பட்டவை நிறைவேற்றப்படல், அதற்கு மாறானவை செயலற்றுப் போதல், சட்டத்தால் விதிக்கப்படும் கடமைகள் பரிபூரணமாக நிறை வேற்றப்படல் ஆகியன உள்ளடக்கப்பட வேண்டும்.

''*மேலும் ஒன்று*'' என்றதிலே பின்வரும் ஏற்பாடுகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

அ) அரசாங்கம் என்பது தேசிய, மாகாண, மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் என்பன வரையறைக்கு உட்பட்ட தனித்துவமானதும், அவை ஒன்றிலே ஒன்று தங்கி நிற்பனவாக வும், ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகவும் உருவாக்கி பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.


ஆ) நீதிபரிபாலன அதிகாரம் யாப்பில் வலிமையுடையதாக உள்ளடக்கப்பட வேண்டும்.

ஒரு சிறந்த அரசாங்கம் அமையவும், அரசியல் யாப்பின் மூலம் நல்லாட்சிக்கும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுதலும், பிணக்குகளை சட்டமுறைப்படி தீர்த்துக் கொள்ளும் வழிமுறைகளும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட அரசியல் யாப்பு ஏற்பாடு கள் ஸ்தரமாக செயல் வடிவம் பெற சட்ட ஆட்சியும் நீதித்துறை சுதந்திரமும் பிரதான உறுப்புரையாக உள்வாங்கப்பட வேண்டும்.

இவற்றை நான் இங்கே எடுத்துக் கூறிய தற்கான காரணம் ஒரு ஒற்றுமையான நாட் டைக்கட்டி எழுப்புவதிலே எங்கள் பாடசாலை கள் பொறுப்புவாய்ந்த கணிசமான பங்களிப் பைச் செய்ய முடியும் என்பதனாலாகும். எங்களுடைய பாடசாலைகள் இவற்றைச் செய்ய முடியாது போனால் சட்டவாக்கத்தால் மட்டும் தேசிய ஒற்றுமையை எப்படிக் கட்டி எழுப்ப முடியும்?

இந்தக் கல்லூரி வளாகத்திலே கல்வி பெற்றுத் தேறி நாடு என்ற பரந்த பெரும் வெளிக்குள் உட்பிரவேசிக்கும் மாணவர்கள் அறிவு ஒளி நிறைந்தவர்களாகவும், நல்லொ ழுக்கப் பண்புகள் உள்ளவர்களாகவும், பூரண மான மனிதர்களாகவும் வளர்ச்சி அடைந்து அவர்களுடைய பிரசன்னம் பல்லின சமுதா யத்திற்கு நிறைவான நல்ல உதாரண புருஷர் களாக நாட்டைக் கட்டி எழுப்புதலுக்கு வைராக் கியமுள்ள புதிய சக்தியாக, ஒளிக் கீற்றாக பங்களிப்பு செய்ய வேண்டுமென வாழ்த்து கிறேன். (ந-5)

# ஒஸ்கார் விருது வென்ற நடிகர் கார்ல் மால்ட் மரணம்



ஒஸ்கார் விருது வென்ற ஹொலிவூட் நடிகர் கார்ல் மால்டன், தனது 97 ஆவது வயதில் மரணமானார்.

கடந்த பல வருட காலமாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1951 ஆம் ஆண்டு 'ஏ ஸ்றீட்கார் நேம்ட் டிஸயர்' என்ற திரைப்படத்தில் நடித்தமைக்காக அவருக்கு சிறந்த துணை நடிகருக்கான ஒஸ்கார் விருது கிடைத்தது.

தொடர்ந்து 1954 ஆம் ஆண்டில் மீளவும் அவர் ஒஸ்கார் விருதுக்கு பெயர் குறிப்பிடப்பட்டார்.

'ஒன் த வோட்டர்புறொண்ட்' 'பேர்ட் மான் ஒப் அல்கட்ராஸ்', 'ஹவ் வெஸ்ட் வோஸ்வொன்', 'கிப்ஸி' மற்றும் 'பட்டன்' ஆகியன கார்ல் மால்டன் நடித்த திரைப்படங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

1972 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை ஒளிபரப்பப்பட்ட 'ஸ்றீட்ஸ் ஒப்சான் பிரான்சிஸ்கோ' தொலைக் காட்சித் தொடரில் துப்பறிவாளர் மைக்ஸ்டோன் கதாபாத்திரத்தில் நடித்து பெரும் வரவேற்பை அவர் பெற்றார். (ஓ-6)

# அரசியல் தஞ்சம் கோருவோருக்கு ஜப்பானால் புதிய சட்ட வரைபு வெளியீடு

வெளிநாடுகளில் இருந்து தமது நாட்டில் அரசியல் தஞ்சம் கோரி சட்ட விரோதமாக உள் நுழைபவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை ஜப்பான் மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் இருந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் ஆயிரத்து 180 பேர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகவும் அவர்களில் 57 பேருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜப்பான் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் சர்வதேச மன்னிப்பு சபையின் ஜப்பான் கிளையின் அகதிகள் விவகாரத்திற்கான அதிகாரி டொமோகோ இசீ இது தொடர்பான அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இது தொடர்பில் ஜப்பானின் குடி வரவு சட்ட அமைச்சினால் சட்ட வரைவு ஒன்று வெளியிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்ட வரைவின்படி சட்ட விரோதமான முறையில் ஜப்பானில் குடியேறியிருப்பவர்கள் அதிகரித்து வரும் அரசியல் தஞ்சம் கோருபவர்களின் எண்ணிக்கை விசாக் காலம் நிறைவடைந்ததன் பின்னரும் நாட்டில் தங்கியுள்ளவர்கள் என்பவற்றை கட்டுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த சட்ட வரைவில் அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கு அது வழங்கப்படுவதற்கான சிறிய வாய்ப்பு இருப்பதாக டொமோகோ இசீ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இதுவரையில் அரசியல் தஞ்சம் கோரியவர்களுள் எத்தனை பேர் ஜப்பானில் அரசியல் அந்தஸ்து பெறுவர் என்பது குறித்து தெளிவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளவர்களை ஜப்பானின் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக வெளியேற்ற இந்த சட்டவரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதல்கட்டமாக சட்ட விரோத குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் ஒன்று அனுப்பப்பட்டு அதன் பின்னர் அவர்கள் மறுமொழிக்கேற்ப வெளியேற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் புதிய சட்ட வரைவின் படி ஜப்பானில் அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கு தற்காலிக குடியிருப்பு உரிமை வழங்கப்படும். அதன் பின்னர் 3 மாதங்களுக்கு ஒரு முறை அவர்கள் ஜப்பான் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த நடைமுறை அரசியல் தஞ்சம் கோரியவர்களுக்கு குடிவரவு நீதி அமைச்சின் அனுமதி கிடைக்கும் வரையில் பின்பற்றப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)




# புகைப்பிடிப்பதை கைவிட்டால் திருமணச் செலவை அரசு ஏற்கும்

## சவூதி அரேபியா அறிவிப்பு


சவுதி அரேபியாவின் மொத்த மக்கள் தொகை 2 கோடியே 76 இலட்சம்ஆகும். இதில் நான்கில் ஒரு பகுதியினர் புகை பிடிப்பவர்களாக இருக்கிறார்கள். புகை பிடிக்கும் பழக்கத்தை கைவிடச் செய்வதற்கான இயக்கத்தை அந்த நாட்டு அரசு தொடங்கி உள்ளது. புகைப் பிடிப்பதை கை விட முன்வருபவர்களுக்கு திருமணச் செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் திருமணத்துக்கான செலவு முழுவதும் மணமகனின் பொறுப்பு ஆகும். திருமண செலவு, சீதனம், வீடு என்று எல்லாமே மணமகனின் செலவு ஆகும். இதனால் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றால் மணமகன்கள் நிறைய பணம் சேர்க்க வேண்டும். இதனால் தான் பல ஆண்கள் மிக தாமதமாக திருமணம் செய்து கொள்கிறார்கள்.

இதன் காரணமாகத்தான் ஆண்களை கவர்ந்து இழுப்பதற்காக இப்படி ஒரு பரிசுத் திட்டம் அறிவிக்கப்பட்டு உள்ளது. குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுபவரின் முழுத் திருமணச் செலவும் ஏற்றக்கொள்ளப்படும் எனவும் மற்றும் 20 பேருக்கு வீட்டுக்கு தேவையான மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்கள் இலவசமாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குலுக்கல் ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி நடக்கவுள்ளது. (ஓ-6)

# குரோஷிய பிரதமர் ஐவோ சனாடர் பதவி விலகுவதாக அதிரடி அறிவிப்பு



குரோஷிய பிரதமர் ஜவா சனாடர்தான் பதவி விலகப் போவதாகவும் அரசியலிலிருந்து ஒதுங்கப் போவதாகவும் அறிவிப்புச் செய்துள்ளார்.

தான் அரசியல் செயற்பாடுகளிலிருந்து வாபஸ் பெறத் தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடப் போவதில்லை என்வும் சனாடர் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் சனாடர் (56 வயது) போட்டியிட வாய்ப்புள்ளதாக ஊடகங்கள் பலவும் ஊகம் வெளியிட்ட நிலையில் பிரதமரின் இராஜினாமா அறிவிப்பு அனைவரையும் வியப்படையச் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

பழமைவாத குரோஷிய ஜனநாயக ஒன்றிய கட்சியின் தலைவரான சனாடர், 2003 ஆம் ஆண்டிலிருந்து அந்நாட்டின் பிரதமராக சேவையாற்றி வருகிறார்.

குரோஷிய தலைநகர் ஸாகிரெப்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு சனாடர் உரையாற்றுகையில்,

எனது பணி முடிந்து விட்டது எனது அரசியல் வாழ்க்கை தற்போது முடிவடைகிறது என்று கூறினார்.

மேலும், சுகவீனம் காரணமாகவோ அன்றி ஐரோப்பிய ஒன்றியத்தில் பதவியொன்றைப் பெறும் முகமாகவோ தான் இராஜினாமா செய்யவில்லை எனக் கூறிய சனாடர் இந்த தீர்மானத்தை ஆழ்ந்த யோசனையின் பின்பே எடுத்ததாகத் தெரிவித்தார்.

சனாடர் கடந்த 2007 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக பிரதமர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவர் தனது பதவிக் காலத்தில் நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் குரோஷியா உறுப்புரிமை பெற வழிவகை செய்தார்.

இந்நிலையில் தனது தந்திரோபாய இலக்குகள் எட்டப்பட்டுள்ளதால் திருப்தியுடன் அரசியலிலிருந்து ஒதுங்குவதாக அவர் கூறினார்.

குரோஷியாவின் புதிய பிரதமராக பிரதிப் பிரதமர் ஜட்ரன்கா கோஸரை நியமிக்க சனாடர் சிபாரிசு செய்துள்ளார். (ஓ-6)

# ஈராக்கிலிருந்து வெளியேறும் அமெரிக்க இராணுவம்

(பக்தாத்)

ஈராக்கில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறத் தொடங்கியுள்ளது. எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு இறுதிக்குள் மொத்த அமெரிக்க இராணுவமும் வெளியேறுவது முழுமை அடைந்து இருக்கும்.

அமெரிக்க இராணுவம் 2003 ஆம் ஆண்டு ஈராக்குக்குள் நுழைந்தது. 6 ஆண்டுகளுக்கு பின்னர் அது அங்கிருந்து வெளியேறத் தொடங்கி உள்ளது.

ஈராக் நகரங்களில் நிறுத்தப்பட்டு இருந்த அமெரிக்க இராணுவ வீரர்கள் தங்கள் முகாம்களுக்குத் திரும்பினார்கள். நகரங்களின் பாதுகாப்புக்கு ஈராக் இராணுவம் பொறுப்பு ஏற்கத் தயாராகி வருகிறது.

அமெரிக்கா திரும்பும் இராணுவத்துக்கு ஈராக் ஜனாதிபதி ஜலால் தலாபாணி நன்றி தெரிவித்துள்ளார். ஈராக் போரில் அமெரிக்க வீரர்கள் 4 ஆயிரத்து 321 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# மைக்கல் ஜாக்சனின் உடல் 7 ஆம் திகதி அடக்கம் செய்ய ஏற்பாடு

(லண்டன்)



பொப் இசை உலகின் மன்னன் மறைந்த மைக்கேல் ஜாக்சன் உடல் அடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறலாம் என்று லண்டனில் இருந்து வெளியாகும் சன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ஸ்டேப்பிள்ஸ் மையத்தில் இந்த நிகழ்ச்சி காலை 10 மணிக்கு தொடங்கும் என்றும் 20 ஆயிரம் பேர் கலந்துகொள்ளக் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள மேலும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் வருவார்கள் என்றும் அவர்களுக்காக அந்த அரங்கத்தின் வெளியே இராட்சத திரை அமைக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக மைக்கேல் ஜாக்சனின் உடல் அடக்கம் நெவர்லேண்ட் என்ற இடத்தில் நடத்த திட்டமிடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## ஐ.நா.வின் தடையை மீறி

# வட கொரியா ஏவுகணைச் சோதனை

(சியோல்)

வடகொரியா கடந்த சில மாதங்களாக ஏவுகணைகளை விண்ணில் ஏவி சோதனை நடத்தி வருகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் அந்த நாடு சுமார் 3 ஆயிரத்து 200 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்கும் ஏவுகணையை ஏவி உலக நாடுகளை ஆச்சரியப்படுத்தியது.

கடந்த மே மாதம் 25 ஆம் திகதி வட கொரியா அணு ஆயுத ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. இதற்கு பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. அதை. கண்டு கொள்ளாத வடகொரியா அடுத்தடுத்து 4 தடவை அணு ஏவுகணைகளை விண்ணில் செலுத்தி சோதித்துப் பார்த்தது.

இதையடுத்து அணு ஏவுகணைகளை சோதித்துப் பார்க்க வடகொரியாவுக்கு தடை விதித்து ஐ.நா. சபை தீர்மானம்கொண்டு வந்தது. இதையும் வடகொரியா கண்டுகொள்ளவில்லை. தொடர்ந்து ஏவுகணை ஆய்வில் அந்த நாடு ஈடுபட்டுள்ளது.

நேற்று முன்தினம் திடீரென 4 குறுகிய தூர ஏவுகணைகளை வடகொரியா விண்ணில் ஏவியது. இந்த ஏவுகணைகள் சுமார் 100 கிலோ மீற்றர் தூரம் வரை பறந்து சென்று தாக்கும் சக்தி கொண்டவை. இந்த சோதனை அண்டை நாடான தென்கொரியாவை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. (ஓ-6)

# வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை அனுராதபுரம் எல்லைக் கிராமங்களில் குடியமர்த்த ஏற்பாடு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நிவாரணக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை வட மாகாணத்திற்கும் வட மத்திய மாகாணத்திற்கும் இடையில் உள்ள எல்லைக் கிராமங்களில் குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் முன் முயற்சியாக சுமார் 5000 பேர் மதவாச்சி மன்னார் வீதியில் அனுராதபுரம் எல்லையில் உள்ள மாங்குளம் தருமபுரம் கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நிலவும் இடநெருக்கடி காரணமாகவே இவ்வாறு எல்லைக்கிராமத்தில் அமைக் கப்பட்டுள்ள நிலையத்தில் இவர்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் வவுனியா மாவட்டச் செயலகமே இவர்களின் நிர்வாகம் மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் நலன்புரி நிலையமும் மூடப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னியில் இருந்து வந்து நிவாரணக் கிராமங்களில் தங்கியிருந்த சிலர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் அவர்களைத் தேடும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சிகிச்சை பெற வைத்தியசாலைகளுக்கு வந்த சிலர் மீண்டும் நலன்புரி முகாம்களுக்குத் திரும்பவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# மோதல்களால் ஏற்பட்டுள்ள சேத விபரங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்கும் நோக்கில் வடபகுதியில் மோதல்களால் ஏற்பட்டிருக்கும் சேத விபரங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒருகட்டமாக முல்லைத்தீவு கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் கடந்த புதன்கிழமை தமது குழுவினருடன் இந்த மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர்.

அரசாங்க அதிபர்களுடன் இந்த மாவட்டங்களுக்குச் சென்ற குழுவினர் அங்கு மோதல்கள் காரணமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சேத விபரங்கள் குறித்து தகவல்களை திரட்டும் பணியை ஆரம்பித்தனர்.

இவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்களைக் கொண்டு மீள்குடியேற்றத்திற்கான சாத்தியக் கூறுகளை ஆராயவிருப்பதாக மீள் குடியேற்ற அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ஓ-6)

# வணங்காமண் கப்பலை வெளியேற்றியமை சர்வதேச விதிகளுக்கு மாறான செயல்

## கப்பலின் கப்டன் முஸ்தபா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை சென்ற வணங்காமண் கப்பலை சோதனை நடத்தி ஆயுதங்களை இல்லை என்று உறுதி செய்த பின்னரும் கப்பலை அனுமதிக்காமல் வெளியேற்றியமை சர்வதேச விதிகளுக்கு மாறானது என கப்பலின் கப்டன் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டு நிவாரணப் பொருட்களுடன் நடுக்கடலில் நின்று கொண்டிருந்த வணங்காமண் கப்பல் நேற்று முன்தினம் சென்னைத் துறை முகத்திற்குள் வந்தது. கப்பலில் இருந்து நிவாரணப் பொருட்கள் இறக்கப்பட்டு சரக்கு கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளது.

இதுகுறித்து வணங்காமண் கப்பலின் கப்டன் முகமது முஸ்தபா தெரிவிக்கையில்,

இலங்கை சென்ற போது இராணுவத்தினர் எங்களை ஐந்து நாள் கப்பலிலேயே சிறை வைத்தனர். சோதனை நடத்தி ஆயுதங்கள் இல்லை என்று உறுதி செய்த பின்னரும் கப்பலை அனுமதிக்காமல் வெளியேற்றினர். இது சர்வதேச விதிகளுக்கு மாறானது. தற்போது கப்பலில் உள்ள நிவாரணப் பொருட்களை இலங்கை அரசு ஏற்றுக் கொள்வதாகச் சொன்னாலும் மீண்டும் இலங்கை செல்ல விருப்பம் இல்லை. பொருட்களை இறக்கிவிட்டு கொல்கத்தா செல்கிறோம் என்றார்.

இதைத் தொடர்ந்து வணங்காமண் கப்பலில் உள்ள நிவாரணப் பொருட்கள் அனைத்தும் இறக்கப்பட்டு கொன்ரெய்னர்களில் ஏற்படுகின்றன. இவை வழக்கமாக செல்லும் சரக்கு கப்பல் மூலமாக இலங்கைக்கு அனுப்பப்பட உள்ளன. இரண்டு நாட்களில் இந்த பணிகளை முடித்து நிவாரணப் பொருட்கள் கொண்ட சரக்குக்கப்பல் இலங்கைக்கு செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ-6)

# நிவாரணக் கிராமங்களில் இருந்து 856 மாணவர்கள் க.பொ.த.உ/த பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்

நிவாரணக் கிராமங்களிலிருந்து எதிர்வரும் ஓகஸ்ட் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு 856 மாணவர்கள் தோற்றவுள்ளனர். அதேநேரம் ஓகஸ்ட் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு சுமார் 6 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இவர்களது வசதி கருதி அவரவர் தங்கியுள்ள நிவாரணக் கிராமங்களிலேயே பரீட்சை நிலையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்து வவுனியா நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ள க.பொ.த (உயர்தரம்) மாணவர்களும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக ஏழு வலயங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

கதிர்காமர் நிவாரணக்கிராமம், குமாரசுவாமி நிவாரணக்கிராமம், அருணாச்சலம் நிவாரணக்கிராமங்கள் உட்பட சகல நிவாரணக் கிராமங்களும் அடங்கலாக பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மாணவர்களின் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி அடையாள அட்டை வழங்குவதற்கு பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. புகைப்படப்பிடிப்பாளரை பிரத்தியேகமாக அனுப்பி படங்கள் எடுத்து மாணவர் அடையாள அட்டைகளை வழங்குவதற்கும் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பரீட்சைகளுக்கான அதிகாரிகள் மதவாச்சியில் இருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளனர். நிவாரணக் கிராமங்களிலுள்ள ஆசிரியர்கள் மேற்பார்வையாளர்களாகப் பணியாற்றுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-6)

# வடக்கின் வசந்தத்தின் கீழ் இலவசமாக கால்நடைகளை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வன்னி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இலவசமாக கால் நடைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா செட்டிகுளம் இடைத்தங்கல் முகாம்களில் வாழும் பொது மக்களின் வாழ்க்கைத்தரம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு அவர்கள் சொந்த இடங்களுக்குச் சென்று தமது பொது வாழ்க்கையை நடத்தவும் அவர்களுக்கு ஜீவனோபாயமாக கால் நடைகளை இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தியமைச்சர் சி.பி.ரத்நாயக்க கடந்த புதன்கிழமை செட்டிகுளம் இடைத்தங்கல் முகாமிற்கு விஜயம் செய்தார். இதன் பின்னரே பாதிப்பிற்குள்ளான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் இலவசமாக கால் நடைகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டார் என்றும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஓ-6)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### பன்னிரெண்டாம் நாள் திருவிழா

## காத்தருள வாரும் அம்மா...

கடல் சூழ் நயினையம்பதி தீவாம்
அதில் உறையும் நாகபூஷணி தாயே
நலம் தரும் நாயகியே
நாகம் தனில் வீற்றிருந்து நாடு
செழிக்கவென்றே நல்லாட்சி புரிந்தே
நாடோறும் உனை நாவதனில்
துதித்து நிற்க நாடி வரும் உன்
அடியாரைக் காத்தருள வாருமம்மா

ஆர். பிரதாயினி

## அருள் மழை பொழிந்திடம்மா

தேடி வந்து உன்பாதம் காண
தேவி நான் நினைக்கின்றேன் – உன்னை
நாடி வந்து அருளைப் பெற
நாளெல்லாம் துடிக்கின்றேன் – உன்னைப்
பாடித் துதித்து பரவசமாகி விட
பார்த்திருக்கிறேன் நாளையெண்ணி – நீயாய்
ஓடிவந்து உனைக் காட்டி
ஒளியேற்றி வைத்திடம்மா...
ஆடி வந்து அகிலம் காத்து
அருள்மழை பொழிந்திடம்மா...

வி. பாரதி
அச்சுவேலி

## ஒளியைத் தந்திடு தாயே நீ

அன்னை அன்னை அன்னை என்றே
உனையே தினமும் பூஜிக்கின்றேன்
உன் அருளும் ஆசியும் நிலைத்திடவே
உன் அன்பும் பாசமும் வேண்டுமம்மா

கண்ணே மணியே கற்பகமே
கருவே உருவே என் ஒளியே
இருளைப் போக்கி என்றென்றும்
ஒளியைத் தந்திடு தாயே நீ

அல்லும் பகலும் அழுகிடும் எம்
தொல்லைகள் போக அருள் செய்வாய்
எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா

அன்னையின் அடியாள்

## உனைப் போல தெய்வம் யாரம்மா?

உனைப் போல தெய்வம் யாரம்மா – இம்
மண்ணில் உயிர்க்கெல்லாம் துணை நீயம்மா
பாரினிலே படும்துயரம் போக்கிட நீ வந்திடம்மா
பட்ட துன்பம் அத்தனையும் மறந்திட நீ செய்திடம்மா
புத்துயிரும் தந்தெம்மைப் புதுமை பெற வைத்திடம்மா
புது உலகம் தனைப் படைத்து பூவிழியால் காத்திடம்மா
இனிவரும் இன்னல்தனை இடையினிலே தடுத்திடம்மா
தாங்கிடவோ இதயமில்லைத் தாயே எமைப் பார்த்திடம்மா

திருமதி. வி. கலா
மல்லாகம்

## நலந்தரும் தாயே போற்றி

நயினா தீவுத் தலமே நாடி
திருப்பெருங் கோவில் கொண்டே அமர்ந்த
நயினா தீவின் நாயகியே எம்
நாக பூஷணித் தாயே போற்றி!
நயினா தீவை ஆளும் உனையே
நாளும் தேடி அடியவர் கூடும்
நயினா தீவுத் தேவியே அன்பர்
நலமே காத்திடும் தாயே போற்றி!

ப. மகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு

மீனுக்கு நீரிலும், உலோபிக்கு காசிலும், தாய்க்கு மகளிடமும், பக்தனுக்கு ஆண்டவனிடத்திலும், அயோக்கியனுக்கு இலஞ்சத்திலும் பற்று அதிகம்.

– ஓர் அறிஞன்

வலம்புரி

## அரச பாடசாலைகள் பணம் அறவிட்டால் கல்வி அமைச்சுக்கு முறையிடவும்

அரச பாடசாலைகள் தரம் ஒன்று தொடக்கம் தரம் பன்னிரண்டு வரையான எந்த அனுமதிக்கும் வசதிக்கட்டணம் மற்றும் அபிவிருத்திச் சங்க உறுப்புரிமைக் கட்டணம் தவிர்ந்த வேறு எந்த கட்டணத்தையும் அறிவிடக் கூடாதென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதனை மீறி எந்த அரச பாடசாலையேனும் கட்டணம் அறவிட்டால் கல்வியமைச்சு மற்றும் மாகாண கல்வியமைச்சுக்கு உடனடியாக அறிவிக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் நகைச்சுவையாகும்.

இதற்கு ஏ.ஆர்.ரகுமானுக்குக் கொடுத்த ஒஸ்கார் விருது வழங்கப்படலாம்.

இலங்கையின் பிரபல்யமான பாடசாலைகள் அறவிடுகின்ற டொனேசன்; லண்டன், சுவிஸ் நாடுகளுக்கு இலங்கையர்கள் சட்டவிரோதமாக செல்வதற்காக ஏஜென்சிகளுக்கு செலுத்தும் கட்டணத்துக்கு ஈடாக வந்துவிடுமோ என்ற அச்சமே உள்ளது.

அந்தளவிற்கு பிரபல்யமான அரச பாடசாலைகள் டொனேசன் அறவிடுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலையை நோக்கினால் ஐம்பதாயிரம் ரூபாய் ஆகக் குறைந்த டொனேசனாக உள்ளது.

நிலைமை இதுவாக இருக்கும் போது கல்வியமைச்சு சந்திரமண்டலத்தில் இருந்து சிந்திப்பது போல, அரச பாடசாலைகள் கட்டணம் அறிவிட்டால் உடன் அறியத்தருமாறு அறிக்கை விடுகிறது.

பிரபல்யமான பாடசாலைகள் டொனேசன் வேண்டுவதை தடுக்கவும் தவிர்க்கவும் முடியாத கல்வியமைச்சினால் இந்த நாட்டில் பன்முகத் தன்மை வாய்ந்ததான கல்வி விருத்தியை ஏற்படுத்திவிட முடியாதென்பது தெளிவு.

பாடசாலைகளின் வளங்களைப் பெருக்குவதற்காகவே 'டொனேசன்' எனக் கூறி எவரும் தப்பித்துக் கொள்ளலாம்.

ஆனால் அதன் மறுபுறத்தில் ஆற்றலும் அறிவுமுள்ள ஏழை மாணவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு பதிவின்றி மறைக்கப்படுகின்றது என்ற உண்மை உணரப்படவேண்டும்.

அது மட்டுமன்றி பிரபல்யமான பாடசாலைகள் அறவிடுகின்ற டொனேசன் ஊர்ப் பாடசாலைகளின் கருவை அறுத்தெறிகின்றது.

அடிப்படை வளங்கள் இல்லாதபோதிலும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பினால் மிகப்பெரும் கல்விச் சாதனைகளைப் படைத்த ஊர்ப்பாடசாலைகள் இன்று வெறிச்சோடிக் கிடப்பதன் சூத்திரதாரி 'டொனேசன்' என்பது மறுக்க முடியாத உண்மை.

எதுவாயினும் டொனேசன் வேண்டுவது ஆயுள் தண்டனைக்குரிய குற்றம் என்ற சட்டத்தை அமுல்படுத்தாதவரை, பிரபல்யமான பாடசாலைகளின் சிந்தனையெல்லாம் காகத்தின் கனவுபோல் டொனேசன் ஆகவே இருக்கும்.

அந்த இருப்பு ஊர்ப் பள்ளிகளின் உயிரைக் குடிக்கவே செய்யும்.

# காவல்துறை மற்றும் பொதுநிர்வாக ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை அமைச்சுக்களுக்கு வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

இதுவரை காலமும் இயங்காமல் இருந்த காவல்துறை மற்றும் பொதுநிர்வாக அணைக்குழுக்களின் அதிகாரங்களை அமைச்சுக்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி காவல்துறை ஆணைக்குழு மற்றும் பொது நிர்வாக ஆணைக்குழு ஆகியவற்றின் பணிகளை அந்த அந்த அமைச்சுக்களின் செயலாளர்கள் முன்னெடுப்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஆணைக்குழுக்கள் இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுயாதீன ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளை ஆளும் கட்சி அமைச்சுக்களிடம் ஒப்படைப்பது எவ்வளவு தூரம் வெளிப்படையாக அமையுமென அரசியல் நோக்கர்கள் கேள்வியெழுப்பியுள்ளன.

காவல்துறை நியமனங்கள், தண்டனைகள், தீர்மானங்கள் உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் இந்த ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## மாவட்ட கலை கலாசார பேரவையின் செயற்குழுக் கூட்டம்

மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்களைத் தவ்றாது சமுகமளிக்குமாறு மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (6)

## மதவாச்சி சோதனைச் சாவடியின் பாதுகாப்பு நடைமுறைகளில் தளர்வு

(கொழும்பு)

மதவாச்சி சோதனைச் சாவடியில் பாதுகாப்பு நடைமுறைகளில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 16 மாதங்களுக்கு பின்னர் மதவாச்சி சோதனைச் சாவடியின் பாதுகாப்பு கெடுபிடிகளின் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மதவாச்சியில் இருந்து வவுனியாவிற்குச் செல்லும் வாகனங்கள் மற்றும் நபர்கள் குறித்த சோதனைகளில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சோதனைச்சாவடிகளின் ஊடாக செல்ல வேண்டுமாயின் ஏற்கனவே அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## மாகாண மட்ட கபடிப் போட்டியில் பரு. கலட்டி றோ.க.த.க பாடசாலை சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்டகபடிப் போட்டியில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் இரண்டாம் இடத்தை ஏழாலை மெய்கண்டான் வித்தியாலயம் பெற்றுக் கொண்டுள்ளது.

சம்பியனாக தெரிவாகிய பருத்தித்துறை கலட்டி றோ.க.த.க பாடசாலை தேசியமட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளதாக வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார். (ஓ-6)

## பொருளியல் பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர மைய றோட்டறக்ட் கழகமும், யுனி கணனி நிறுவனமும் இணைந்து நடாத்தும் உயர்தர மாணவர்களுக்கான பொருளியல் பாட கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் கனகரத்தினம் மகா வித்தியாலய ஆசிரியர் வே.கருணாகரனால் நடத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கில் அனைத்து மாணவர்களும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

## ஒப்பந்த அடிப்படையில் கால்நடை வைத்தியர்களை ஆட்சேர்த்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களில் நிலவுகின்ற இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் 2 ஆம் வகுப் பின் 2 ஆம் தரத்திலான கால்நடை வைத்தியர் பதவிக்கு ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் கால் நடைவள அபிவிருத்தி அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.

இப் பதவிக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் உதவிப் பணிப்பாளர் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான விபரங்களையும் படிவத்திணையும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் மாவட்டச் செயலாளர் க.கணேஷ் அறிவித்துள்ளார். ஓ

## ஆனையிறவு ரயில் நிலைய புனரமைப்பிற்கு பாடசாலை மாணவர்களிடமிருந்து நிதி சேகரிப்பு

(கொழும்பு)

வடக்கின் நண்பன் யாழ் தேவி ரயில் சேவை வேலைத்திட்டத்திற்கு பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்காக 'நேசத்தின் தரிப்பிடம்' என்ற பெயரில் விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஆணையிறவு புகையிரத நிலையத்தை பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்புடன் புனரமைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். இந்த திட்டத்திற்கு வடமாகாணம் தவிர்ந்த நாட்டின் அனைத்து பிரதேச பாடசாலைகளினதும் உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி இதற்குரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் குறைந்த பட்சம் 2 ரூபாவும் ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் குறைந்த பட்சம் 10 ரூபாவையும் திரட்டுவதற்கு திட்டமிட்டிருப்பதாக குறிப்பிடப்படுகிறது. (ஓ-6)

## நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்ட கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்தின் ஆலோசனையுடன் யாழ்ப்பாண கல்விவலய பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கிடையே உருவாக்கப்பட்டுள்ள தரவட்டம் இவ் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்பட்டு வருகின்றது. இத் தரவட்டத்தினால் ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் சார்ந்த மேலதிக வினைத்திறனை பெறும் நோக்கோடு மாதாந்தம் கலந்துரையாடல்கள் கருத்தமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

யூலைமாதத்துக்கான கருத்தமர்வு இன்றுசனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 2மணிவரை யாழ் கல்வித் திணைக்கள வளாகத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தமர்வில் சோபோகிளிஸ் எழுதிய அன்ரிக்கனி நாடகம் பற்றி குழந்தை ம.சண்முகலிங்கம் கருத்துரை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தமர்வுக்கு யாழ்கல்வி வலயத்தில் நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆர்வமுள்ள ஏனைய வலய அரங்கியல் கற்பிக்கும் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (ஓ)

## நல்லூர் பிரதேச சபையால் இம் மாதம் ஆயுள்வேத மாதமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மறுசீரமைப்பின்படி நல்லூர் பிரதேச சபையினர் இம் மாதத்தை ஆயுள்வேத மாதமாக அனுஷ்டிக்கவுள்ளனர். இதற்காக சுதேச மருத்துவப் பிரிவு ஒன்று சபையினரால் உருவாக்கப்பட்டு கண்காட்சிகள், துண்டுப் பிரசுரங்கள், விழிப்புணர்வு பிரசாரங்கள், சிரமதானங்கள் போன்ற நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூலிகை இலைக்கஞ்சி, மூலிகை பாயாசம், சத்துமா, ஆயுள் வேத பானங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் அறிவித்துள்ளார். (ஓ-36)

## சுவாமி விவேகானந்தரின் எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



இந்த உலகத்திற்கு அப்பால்,ஏதோ ஒன்று இருக்கிறது என்று எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றன. ஐந்து புலன்களில் அடங்கும் வாழ்க்கையிலேயே, ஜடவுலக வாழ்க்கையிலேயே எல்லாம் முடிந்துவிடவில்லை. இது ஒரு பகுதி மட்டுமே, மேலோட்டமானது மட்டுமே. இதற்குப் பின்னால் எல்லாவற்றிற்கும் அப்பால், தீமையே இல்லாத எல்லையற்றது இருக்கிறது. சிலர் அதைக் கடவுள் என்றும் சிலர் அல்லா என்றும், சிலர் ஜெஹோவா என்றும், சிலர் யோவான் என்றும் பலவிதமாக வழங்குகிறார்கள். வேதாந்தி அதைப்பிரம்மம் என்று சொல்கிறான்.

மதங்களின் போதனைகளைப் பார்க்கும் போது முதலில் நமக்குத் தோன்றுவது, நாம் வாழ்க்கைக்கு முடிவுகட்டுவதே மேல் என்பது தான். வாழ்க்கையின் தீமைகளுக்கு எப்படிப் பரிகாரம் காண்பது என்ற கேள்விக்கு, போராடிக் கொண்டிருக்கிறோம்.

# எமது தனித்துவங்களை விட்டுக்கொடுக்காத வகையில்


# கௌரவமான வாழ்க்கையை மேற்கொள்ளத் தயாராக வேண்டும்


## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

நாம் எவருக்கும் அடிமைகளல்ல என்பதை உணர்ந்து எமது தனித்துவங்களை விட்டுக்கொடுக்காத வகையில் கௌரவமான வாழ்க்கையை நாம் மேற்கொள்ளத் தயாராக வேண்டுமென்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக துவங்கள் இதற்கு பாரிய எதிர்ப்புகளைத் தெரிவித்ததாகவும் அதற்குப் பிந்திய காலங்களில் யாழ்.பல்கலைக்கழகம் நல்லதொரு திசையை நோக்கி முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் இடையில் அது குறுகிய சுயலாபங்களைக் கருதிய தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டதாகவும் விளக்கிக் கூறினார். லிருந்து மீட்டெடுத்து அவர்களுக்கு நிலையானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை அமைத்துக்கொடுப்பதே தனது பிரதான பணியாகும் என்பதையும் விளக்கிக்கூறினார்.

மேற்படி சந்திப்பில் கலந்துகொண்டிருந்த பெருந்திரளான மாணவர்களிடையே





சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம் பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுடனான விசேட சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது 1986 ஆம் ஆண்டு மே மாதம் வருகை தந்திருந்ததன் பின்னர் 23 வருடங்கள் கழிந்த நிலையில்தான் இப் பல்கலைக்கழகத்திற்கு மீள வருகை தந்திருப்பதை உணர்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்ட காலகட்டத்தில் தமிழ்த் தலைமைத்

இன்றைய நிலையில் யாழ். பல்கலைக் கழகத்தை சரியான திசையை நோக்கி முன்னகர்த்துவதே தனது முக்கிய நோக்கம் என்பதை தெளிவுபடுத்திய அமைச்சர், இப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பில் உயர்கல்வி அமைச்சருடன் தொடர்ந்து கலந்துரையாடி வருவதாகவும் வெகுவிரைவில் உயர் கல்வி அமைச்சரை இங்கு அழைத்து வந்து குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்து கலந்துரையாடி தீர்வுகளை எட்டக் கூடிய வாய்ப்பினை உருவாக்க எண்ணியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இன்று பாரிய அழிவு நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கும் எமது மக்களை இவ் அழிவுகளி

இருந்து கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு விடையளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளிமாவட்ட மாணவர்களது போக்குவரத்து வசதிகள் வெகுவிரைவில் பூர்த்திசெய்யப்படுமென நம்பிக்கை தெரிவித்ததுடன் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்ற மாணவர்களது பெற்றோர்கள் குறித்த விபரங்களை வழங்க நடவடிக்கைகள் எடுப்பதாகவும் அதேநேரம் நலன்புரி நிலையங்களில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் தான் முழு முயற்சி எடுத்து வருவதாகவும் இம் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்கும் காலத்திற்கும் சேர்த்து நிவாரணத்துடன் கூடிய வசதிகள் இவர்களுக்கு செய்துகொடுக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார். (ஓ)

## நட்பு நாடலும் விருந்துபசாரமும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் நட்பு நாடலும் நண்பகல் விருந்துபசாரமும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் செல்வன் வ. ஜெனிக்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சந்திரோதயா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் கவிமணி க. ஆனந்தராசா, உரும்பிராய் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற பகுதித் தலைவர் திருமதி ப. ஆனந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-4)

## மண்டைதீவு கிழக்கு வீதியை புனரமைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ள மண்டைதீவு கிழக்கு பிரதான வீதியை உடன் புனரமைத்து வாகனங்கள் மக்கள் போக்குவரத்துக்கு வசதிகளை செய்து உதவுமாறு அப்பகுதி மக்கள் யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி வீதியால் இ.போ.ச வண்டிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்தன. ஆனால் தற்போது இவ்வீதி புனரமைக்காத காரணத்தால் இ.போ. ச. பஸ்வண்டிகள் வயல் வெளி ஊடாக போக்குவரத்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஓ-6)

## நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்ட அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள், ஈழநாடு சிறுகதைகள் நூல் அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் .மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் நூல் அறிமுகவுரை யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜயரத்தினம், நூல் மதிப்புரையை தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார அலுவலர் மா.அருள்சந்திரன், நூல் ஆய்வுரைகளை ஆய்வாளரும் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான எம்.சிறீபதி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் ம.பா. மகாலிங்கசிவம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (4)

## ஆசிய மாணவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய புலமைப்பரிசில்

இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 10 ஆயிரம் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இதன்பிரகாரம் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் ஐரோப்பிய பிராந்திய பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியைத்தொடரும் வாய்ப்பைப் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (ஓ-4)


## கொக்குவில் இந்துக் கல்லூரி

# பாராட்டி வாழ்த்துகிறோம்

2008 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான எமது கல்லூரி மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மாணவர்கள் விபரம் துறை ரீதியாக கீழே தரப்படுகின்றது.

**பொறியியல் துறை**
பால்ராஜ் கிரிபரன்
சிவகுமாரன் நிசாந்
கணேசலிங்கம் தர்மேஸ்வரன்
விஜயகாந்தன் வர்சிகன்
நடராசமணி சிவாஸ்கர்
சுபாஸ்கரன் சாலவான
ரத்தகுமார் கோபிநாத்
குமாரதேவன் நிரோஜன்
நாகேந்திரம் கௌசிக்
தர்மராஜா பிரவிந்தன்
தவராஜா இளங்கோ
மித்திரா பாலசிங்கம்
ரம்யா சிறிகாந்தன்
சர்வானந்தி ஞானானந்தா
யாழினி நித்தியானந்தன்
நடராஜா யசோதரன்
மார்க்கண்டு சுபாகரன்
நடராசன் கிரிதரன்

**முகாமைத்துவம்**
சிறிகாந்த சிவதர்சன்
ஜெனனி பரமானந்தன்

**வணிகவியல்**
சத்தியசீலன் லதர்சன்
தாரங்கினி நடராசா
சயானி கணேசன்
துரைமணி பார்த்தீபன்
நாகராஜா திருக்குமரன்

**ஏனைய கணிதத் துறைகள்**
சிவசுந்தரம் பிரணவன்
கிருஸ்ணபிள்ளை ஜெனகன்
சிதம்பரநாதன் ஜீவகநாதன்
வரதராஜா தனுசன்
சிற்றம்பலம் அரவிந்
நடராஜா யசோதரன்
சிறிஸ்கந்தராஜா பார்த்தீபன்
பொன்னுத்துரை யசிந்தன்


**விஞ்ஞானத்துறை**
சிவகுருநாதன் விஜயதீபன்
டல்சினி கிருபானந்தன்
செல்வராஜா மாதுரன்
ராஜேஸ்வரன் மோகனசரன்
மதுஜா செல்வராஜா
கந்தசாமி ராகுலன்

**கலைப்பிரிவு**
வேணுகாயினி ராஜயோகபூபதி
கமலநாதன் பிரதீசன்
சோபிகா அருளானந்தி
சுபோகினி பத்மநாதன்
பவாநிதி பாலசுப்பிரமணியம்
நிறஞ்சலா சுந்தரலிங்கம்
வித்தியாயினி தியாகராஜா

**வாழ்த்துபவர்கள்**
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(C/2706) பாடசாலை பழைய மாணவர் சங்கம்.




வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி சிறப்பு கூட்டுறவு நகர் திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கத்திற்கு சங்கத்தலைவர் நா. சுந்தரலிங்கம் மாலையணிவித்து வரவேற்பதையும், அருகில் நெறியாளர் குழு உறுப்பினர் க.தர்மலிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் (கண்ணகையம்மன்) கோயில் தேர்த்திருவிழா காட்சிகளை படங்களில் காணலாம்.

# இந்தோனேசியாவுக்குச் சென்ற இலங்கையர்களுக்கு உதவி

## சேச் வேல்ட் நிறுவனம் முன்வருகை

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தோனேசியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்தவர்களிற்கு பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை சேச்வேல்ட் சேவிஸ் நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் சோமாலியா போன்ற நாடுகளிலிருந்து இந்தோனேசியா சென்ற 350இற்கும் அதிகமானவர்கள் இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இந்தோனேசியாவின் ஜகர்த்தா மற்றும் சிபாயா பகுதிகளில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்களிற்கான மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றினையும் சேச்வேல்ட் சேவிஸ் நிறுவனத்தினூடாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பு வழங்கிவருகிறது.

அத்துடன் இந்த நிறுவனத்தினால் இடைத்தங்கல் முகாம்களில் அவர்களது கலாசார மற்றும் கல்வி பயிற்சி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

# பாடசாலை நேரங்களில் மாற்றம் செய்ய வேண்டாம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு மாறாக பாடசாலை நேரங்களில் மாற்றம் செய்ய முடியாது என யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

மாணவர்களின் போக்குவரத்து,

### அரச அதிபர் அறிவிப்பு

பாதுகாப்பு காரணங்களைக்கருத்திற் கொண்டு கல்வி அமைச்சில் சுற்று நிருபத்திற்கு மாறாக பாடசாலை நேரங்களில் மாற்றம் செய்ய வேண்டாம் என யாழ். அரச அதிபர்கேட்டுள்ளார். (ச-5)

# 'வர்த்தகப் பெயர் தரப்படுத்தல்' சான்றிதழ் பெற்றது மக்கள்வங்கி

அதிகமாக நேசிக்கப்படும் வங்கி என்ற புகழ் நாமத்தைப் பெற்றுள்ள மக்கள் வங்கிக்கு பிரான்ட் ஃபினான்ஸ் அமைப்பு AA- தரப்படுத்தலுடனான வர்த்தகப் பெயர் தரப்படுத்தல் சான்றிதழை வழங்கியுள்ளது.

நாட்டில் செயற்படும் அனைத்து வங்கிகள் மத்தியிலும் இதுவே மிக உயர்ந்த தரப்படுத்தலாகும். மக்கள் வங்கி தனது வர்த்தகப் பெயரை கட்டியெழுப்புவதற்கு நீண்டகாலமாகவே மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு கிடைத்த நற்சான்று இதுவாகும்.

பிரான்ட் ஃபினான்ஸ் லங்கா அமைப்பு கடந்த 5 வருடங்களாக ஆண்டு தோறும் வர்த்தகப் பெயர் தரப்படுத்தலை மேற்கொண்டு அதன் முடிபுகளை ரான்ட்ஸ் சஞ்சிகையில் வெளியிடுகின்றது.

இலங்கையில் தலைசிறந்த வர்த்தகப் பெயர்களின் மீளாய்வை உள்ளடக்கிய இப் பிரசுரம் தொழிற்றுறையினரால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகும்.

வெளிப்படையாகக் கிடைக்கும் தரவுகள், சந்தை ஆய்வுகள் என்பவற்றின் அடிப்படையிலேயே தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது.

வர்த்தகப் பெயர் தரப்படுத்தல் என்பது ஒரு கம்பனியின் கடன் தகுதி தரப்படுத்தல் போன்றதாகும். அதாவது வர்த்தகப் பெயரின் எதிர்கால நிலைமை பற்றி முதலீட்டாளர்கள் அறிந்து கொள்ளவும் வியாபார செயற்பாடுகளின் மூலம் எதிர்காலத்தில் வருமானத்தை தேடிக்கொள்ள வர்த்தக பெயர் கொண்டுள்ள ஆற்றலை எடுத்துக்காட்டவும் இது உதவுகின்றது.

ஆகவே மக்கள் வங்கிக்கு கிடைத்துள்ள AA-தரப்படுத்தல் சான்றிதழானது அந்த வர்த்தகப் பெயரின் உள்ளார்ந்த ஆற்றலை வங்கியின் முகாமையாளர்கள் நன்கு அறிந்துள்ளார்கள் என்ற உத்தரவாதத்தை சகல பங்காளிகளுக்கும் வழங்குகின்றது.

மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ இதுபற்றித் தெரிவிக்கையில்;

எமது நிலைமைபற்றிய சுயாதீனமான உறுதிப்படுத்துதல் என்ற வகையில் இந்தமதிப்பீடு எமது முகாமைப் பிரிவிற்கு மிகவும் பயனுள்ளதாகும்.

எமது நிலைமை மேலும் பலப்படுத்தவும் போட்டி மிகுந்த சந்தையில் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற் கொள்ளவும் இது உதவும்.

இந்த விடயத்தில் வர்த்தகப் பெயருக்கு முக்கியமான பங்கு உண்டு. அரசாங்கத்துறை நிறுவனங்கள் தனியார் துறை நிறுவனங்களுடன் போட்டி போட்டு முன்னணி நிலைக்கு வரமுடியும் என்பதையும் இம் மதிப்பீடு எடுத்துக் காட்டுகிறது என்று கூறினார்.

பிரான்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி. என்பது 1996ஆம் ஆண்டு லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். வர்த்தகப் பெயர்களை மதிப்பீடு செய்வதிலும் பெறுமதி அடிப்படையிலான சந்தைப்படுத்தல் ஆலோசனைகளை வழங்குவதிலும் உலகில் முன்னணி வகிக்கும் சுயாதீன அமைப்பாகிய இது வர்த்தகப் பெயர் அடிப்படையில் இயங்கும் நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்தல் மற்றும் நிதித்துறைகளில் பல தரப்பட்ட சேவைகளை உலகளாவிய ரீதியில் வழங்கி வருகின்றது. பிரான்ட் ஃபினான்ஸ் லங்கா என்பது இந்த உலகளாவிய அமைப்பின் இலங்கைப் பிரிவாகும்.

# மாகாணமட்ட விளையாட்டுப் போட்டி கபடியில் யாழ். அணி முதலிடம்!

(மன்னார்)

மாகாணமட்டக் கபடிப் போட்டியில் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் அணிகள் முதலிரு இடங்களையும் பெற்றுள்ளன.

வடக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் நேற்று மன்னாரில் ஆரம்பமானது.

நேற்று மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட பாடசாலைகள் முதலிரண்டு இடங்களைப் பெற்றுள்ளன.

யாழ்.கலட்டி றோ.க.த.க பாடசாலை முதலாமிடத்தையும் யாழ். இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றது.

மூன்றாமிடம் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக்கு கிடைத்துள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் இவ் வருடமே கபடிப் போட்டி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் யாழ்.பாடசாலைகள் முதலிரண்டு இடங்களையும் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பெண்கள் பிரிவில் வவுனியா கல்மடுநகர் மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும் வவுனியா கணேஸ்வரா மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும் மன்னார் அலமீனா மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன. (ச-5)

# விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் செரினா வில்லியம்ஸ்

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு நம்பர்-2 வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் இலகுவாக முன்னேறினார்.

உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் இங்கிலாந்து, லண்டனில் நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் நம்பர்-2 வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், உலகின் நம்பர்-4 வீராங்கனையான ரஷ்யாவின் எலினா டெமன்டிவாவை சந்தித்தார்.

விறுவிறுப்பான அரையிறுதியில் டை-பிரேக்கர் வரை நீடித்த முதல் செட்டை டெமன்டிவா 7-6 என கைப்பற்றினார்.

பின்னர் எழுச்சி கண்ட செரினா இரண்டாவது செட்டை 7-5 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

சிறப்பான டை-பிரேக்கர் வரை நீடித்த மூன்றாவது செட்டில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய செரினா 6-7,7-5,8-6என வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதன் மூலம் விம்பிள்டன் தொடரில் 5ஆவது முறையாக (2002, 2003,2004,2008,2009) இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். இதில் இரண்டு முறை (2003, 2004) சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

### பிரையான் ஜோடி அபாரம்

ஆண்கள் இரட்டையர் அரையிறுதியில் அமெரிக்காவின் பாப், மைக் பிரையான் ஜோடி, தென்னாபிரிக்காவின் வெஸ்லே மோடீ, பெல்ஜியத்தின் டிக் நார்மன் ஜோடியை எதிர் கொண்டது.



பரபரப்பான அரையிறுதியில் டை-பிரேக்கர் வரை சென்ற முதல் இரண்டு செட்டையும் அமெரிக்க ஜோடி 7-6,7-6 என போராடி கைப்பற்றியது.

தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரையான் ஜோடி மூன்றாவது செட்டை 6-4 என தன்வசப்படுத்தியது. இறுதியில் பிரையான் ஜோடி 7-6, 7-6,6-4 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# வீரர்களின் பாதுகாப்பு குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திருப்தி

இலங்கையில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு திருப்தி அளித்திருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.) தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி மூன்று டெஸ்ட்,5 ஒரு நாள் மற்றும் ஒரு இருபது-20 போட்டிகளில் பங்கேற்கவுள்ளது. இதில் பாகிஸ்தான் வீரர்களுக்கு உயரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து பி.சி.பி. தலைவர் இஜாஸ் கூறுகையில்;

இலங்கை சென்றுள்ள எங்கள் அணியின் முகாமையாளர் யவார் சயீத் அனுப்பியுள்ள அறிக்கையின் படி இலங்கையில், பாகிஸ்தான் வீரர்களுக்கு உயரிய பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இது முழு திருப்தி அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆகையால் இலங்கை கிரிக்கெட் சபை கூறியபடி சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

இலங்கை-பாகிஸ்தான் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் காலியில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

வீரர்கள் பாதுகாப்பு நலன் கருதியும் வேறு எந்தவிதமான அசம்பாவிதங்கள் நடப்பதை தடுக்கவும் இலங்கை கிரிக்கெட் சபை ரசிகர்களுக்கு சில நிபந்தனைகள் விதித்துள்ளது.

அதன்படி ரசிகர்கள் மைதானத்திற்குள் தங்கள் அணியின் தேசிய கொடியை மட்டும் கொண்டு செல்லலாம். பதாகைகள் மற்றும் சட்டவிரோதமான வாசகங்கள் கொண்ட அட்டைகளை எடுத்து செல்ல அனுமதி இல்லை என தெரிவித் துள்ளது.

இது தவிர தண்ணீர் போத்தல்கள், டப்பாவில் அடைக்கப் பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் கொண்டுசெல்ல அனுமதி மறுக்கப்படும் என கூறியுள்ளது.

...நூலகப் படிப்பகம் மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## மூன்று இலட்சம் தமிழ்...

தவிர தமிழ் மக்களுக்கு எதிரான போர் அல்ல என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த வெற்றி விடுதலைப் புலிகளுக்கு எதிரான வெற்றியே தவிர, தமிழ் மக்களுக்கு எதிரான வெற்றி அல்ல என்றும் இது ஒட்டு மொத்த இலங்கை மக்களின் வெற்றி என்றும் கூறியிருந்தார்.

ஆனால் அதன் பிறகு முகாம்களிலுள்ள 3 இலட்சம் அப்பாவி தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதுவரையில் எதுவும் செய்யவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றியைத் தொடர்ந்து நடந்த வெற்றிக் கொண்டாட்டங்களில், தமிழ் மன்னனை தோற்கடித்த சிங்கள மன்னன் துட்டகைமுனுவுடன் தன்னை ஒப்பிட்டுப் பேசுவதைக் கேட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மகிழ்ச்சியடைந்து வருவதாகவே தோன்றுகிறது.

விடுதலைப் புலிகளை வெற்றி கண்டு ஆறு வாரங்களுக்கு மேலாகிவிட்டன. அகதிகள் முகாம்களிலுள்ள 3 இலட்சம் அப்பாவித் தமிழ் மக்களை தடையின்றி சந்தித்துப் பேசி உதவிப் பணிகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பணியாளர்களையோ பிற அனைத்துலக நாட்டு அமைப்புக்களின் உதவிப் பணியாளர்களையோ அனுமதிப்பதற்கு அரசு இன்னும் மறுத்து வருகிறது.

படையில் மேலும் 50 ஆயிரம் பேரை சேர்க்க திட்டமிட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

ஏற்கெனவே படையில் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உள்ளனர். அவர்கள் எல்லோருமே சிங்களவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் வரும் ஓகஸ்ட் 8இல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறும் என அரசு அறிவித்துள்ளது.

அப்பாவித் தமிழ் மக்களை அவர்களின் சொந்த ஊர்களில் மீண்டும் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்காமலும் அரசை விமர்சிப்பவர்களை துன்புறுத்திக் கொண்டும், மறுசீரமைப்புக்கு செலவிடுவதற்கு மாறாக அரச பணத்தை படையினருக்கு செலவிட்டுக் கொண்டும் அரசு இருக்குமானால் இந்தத் தேர்தல்களுக்கு அர்த்தமே இல்லை என்று தான் நிதான உள்ளம் படைத்தவர்கள் சொல்வார்கள் என ரைம்ஸ் ஏடு குற்றம் சாட்டியுள்ளது. (எ-1)

## முஸ்லிம் காங்கிரஸின்...

இது உள்ளூராட்சி மன்றங்கள் மாகாண சபைத் தேர்தல் சட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டதெனவும் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு தெரிவித்தார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதில் பொதுச் செயலாளர் நிஷாம் காரியப்பர் உள்ளிட்ட இரு தரப்பினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி, தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட சிலர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

யாழ்.மாநகர சபைக்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பு மனுவில் இளம் வேட்பாளர் ஒருவர் சார்பில் சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக அதனை நிராகரித்தமை சட்டவிரோதமானது என மனுவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (ச-3)

## கலைப்...

முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.கிருஷ்ணராஜாவின் இடத்துக்கே இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ச)

## இலங்கையில் இன்னும்...

வைக்கப்பட்டால் உடனடியாக பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் அந்த வழிகாட்டலில் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கான வர்த்தக விமானங்கள், சுற்றுலாவுக்கு உகந்தவையல்ல. இந்த விமானங்கள் தற்போது தாழப் பறந்தே தென்னிலங்கைக்கு பயணிக்கின்றன.

இலங்கையில் பஸ் சாரதிகள் ஒழுங்காக தமது பஸ்களை செலுத்துவதில்லை. எனவே அதில் பயணம் செய்வது ஆபத்தானவை என பிரித்தானிய பயண எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் இரவில் பயணம் செய்வது ஆபத்தானது. இலங்கையில் அவசர மருத்துவ உதவிகளை நகரங்களுக்கு வெளியே பெற்றுக் கொள்வது கடினமானது.

எனவே இவைகளை கருத்திற்கொண்டு தமது பிரஜைகள் செயற்பட வேண்டும் என பிரித்தானியா தமது நாட்டு பிரஜைகளிடம் கேட்டுள்ளது. (ச-5)

## இலங்கைக்கு...

இறுதிக்கட்டங்களை இலங்கை கையாண்ட விதம் குறித்து அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளால் விடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக இந்த கடனுக்கான இலங்கையின் கோரிக்கை மாதக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இறுதிக்கட்டத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-14)

## ஜனாதிபதி மகிந்த...

118 நாடுகளின் தலைவர்கள் இந்த 15-வது அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த சர்வதேச மாநாடு எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இடம்பெறும். ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும் இந்த விஜயத்தின்போது அவர் பல நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)



யாழ்.பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் பலாலிக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை யாழ்.கட்டளைத் தளபதி பலாலி விமான நிலையத்தில் வைத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# முன்னாள் சிறுவர் போராளிகளின் நலனை உறுதிப்படுத்த வேண்டும்

## ஐ.நா. செயலர் கோரிக்கை

ஆயுதக் குழுக்களில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்களின் நலனையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் இலங்கை அரசாங்கத்தினை கோரியுள்ளார். முக்கியமாக ஆயுதக் குழுக்களில் இருந்து வெளியேறிய சிறுவர்களை அடையாளப்படுத்துதல், விடுதலை, புனர்வாழ்வு என்பவற்றை உறுதிப்படுத்தி சர்வதேச தரத்திற்கு அமைவாக அவர்கள் சமூகத்தில் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதக் குழுக்களின் பிடியிலிருந்த சகல சிறுவர் போராளிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதனை உறுதிப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதென அவர் தெரிவித்துள்ளார். சிறுவர் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைந்து வாழக்கூடிய பின்னனி உருவாக்கப்பட வேண்டும்.

மேலும் அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு பணியாற்ற தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கு பூரண அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

குடும்பங்களிலிருந்து பிரிந்து வாழும் சிறுவர் சிறுமியரது நலன்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிறுவர் போராளிகளைப் பயன்படுத்தும் சகல தரப்பினருக்கும் எதிராக அரசாங்கம் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார். (ச-5)

## சீனா வாழ்...

பாத்திரத்தை தற்போது வகிக்கின்றது. அது தனது பிராந்தியத்திலும் ஆளுமையை கொண்டுள்ளது. சீனா எப்போதும் எமக்கு உதவியாக இருந்துள்ளது. இரு நாடுகளினதும் உறவுகளை பலப்படுத்தும் நோக்கத்துடனே நான் ஐந்து நாள் பயணமாக சீனாவுக்கு வந்துள்ளேன் என்றார் அவர். (ச-5)

## மொனராகலை காட்டுப்...

இடம்பெற்ற இராணுவத்தினரைக் கௌரவிக்கும் நிகழ்வில் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தனது உரையில் தெரிவித்ததாவது,

கிராமப்புற மக்களும் பொலிஸாரும் முன்னரைவிட இப்போதுதான் நிதானமாகவும் விழிப்புடனும் இருக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளால் எந்த வேளைகளிலும் அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறலாம். மொனராகல பகுதியில் அவர்களால் ஏதும் சம்பவங்கள் இடம்பெற்றால் அவற்றுக்கு நான்தான் பொறுப்புக்கூற வேண்டும்.

யுத்தத்தை வெற்றி கொள்ள இராணுவத்தினரும் முப்படையினரும் ஆற்றிய தியாகச் செயல்களுக்காக அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே.

யால காட்டில் நடமாடும் இந்த 20 புலி உறுப்பினர்களையும் கைது செய்ய விசேட இராணுவப் படையினர் ஈடுபடுத்தப்படுவர். எவ்வாறேனும் அவர்களை ஒழித்துவிட உறுதி பூண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ச-5)

## திடீர் சுற்றி...

காலை நடைபெற்ற தேடுதல்களில் குறித்த பிரதேசங்களிலுள்ள தமிழ்க் கடைகளிலும் விசாரணைகள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளின் போராளிகள் ஊடுருவியிருப்பதாக கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே தேடுதல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரதேசங்களில் இருந்து கொழும்பை நோக்கி புறப்பட்ட பயணிகள் பேருந்துகளும் சோதனையிடப்பட்டன. (ச-5)

## சமாதானமும் அபிவிருத்தியும்...

விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த நடவடிக்கையே நாட்டின் அபிவிருத்தி மற்றும் சமாதானம் தொடர்பாக அவர் மீது மக்களை நம்பிக்கைகொள்ள வைத்த காரணிகளென பாலித கோஹன்ன குறிப் பிட்டார். ஆயுதங்களை மௌனப்படுத்தி நாட்டை ஒருநிலைக்கு ஜனாதிபதி கொண்டு வந்திருப்பதாகவும் கோஹன்ன சுட்டிக்காட்டினார்.

“இந்தத் தொடர்ச்சியான ஆதரவைத் தொடர்ந்தே அனைத்து மாகாணசபைத் தேர்தல்களிலும் அரசாங்கம் வெற்றிபெற்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்குப் பாரிய மக்கள் ஆதரவொன்றுள்ளது. அவரின் அரசியல் மீது கொண்டிருந்த நம்பிக்கை தற்பொழுது நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிரந்தர சமாதானம் மீதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எமது இந்த வெற்றி தொடர்ச்சியாகப் பாதுகாக்கப்படும்” என அவர் கூறினார்.

இலங்கை வெளிநாடுகளின் நம்பிக்கையை வெல்லவேண்டிய சூழ்நிலை தோன்றியிருப்பதாகக் குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சின் செயலாளர், இலங்கையிலுள்ள மக்கள் அனைவரினதும் நம்பிக்கையை வென்றிருக்கும் நிலையில் சர்வதேசத்தின் நம்பிக்கையை வெல்ல முடியுமெனவும் அவர் நம்பிக்கையை வெளியிட்டார்.

மோதல்கள் காரணமாக கடந்த 27 வருடங்களாக இலங்கையின் உற்பத்திகள் உலக நாடுகளில் பாரியளவில் வரவேற்பைப் பெற்றிருக்கவில்லையெனவும், உல்லாசப் பயணத்துறை, கைத்தொழில்துறை உள்ளிட்ட துறைகளில் பாரியளவு முன்னேற்றம் ஏற்படாதநிலை காணப்பட்டதாகவும் பாலித கோஹன்ன மேலும் கூறினார். (ச-5)


JAFFNA COLLEGE CEYLON

**The Annual General Meeting of Jaffna College Alumni Association**

The above meeting will be held on the **18th July 2009** at **9.00 am** in **Ottley Hall.** Your presence is very much appreciated.

**PROGRAMME**

| | |
|---|---|
| 9.00 am | - Morning Worship at Cathedral Church, Vaddukoddai |
| 10.00 am | - Felicitation to Mrs.S.Yasotharan |
| 10.45 am | - Tea |
| 11.30 am | - Annual General Meeting in the Ottley Hall |
| 1.00 pm | - Fellowship Lunch |

**Annual General Meeting Agenda**

- Prayer
- Vote of condolences
- Minutes of the last Ex.Co meeting
- Secretary's Report
- Treasurer's Report
- Principal's Report
- Resolutions if any
- Election of new office bearers
- Any Other Business

Hony.Secretary,JCAA

(C-2704)



**BARTLEET FINANCE**

**Bartleet Finance Ltd**, a Central Bank registered progressive finance house providing a wide range of financial services, is a subsidiary of **Bartleet Group**.

**BRANCH MANAGER - JAFFNA**

The position would suit a highly motivated individual with a sound educational background and a Professional Qualification. Willingness to take on the challenge of driving the team in achieving Company objectives, particularly in Leasing. Prior experience in a Financial Institution or a Bank is preferable.

Please address your resumes to:

The Managing Director
**BARTLEET FINANCE LIMITED**
2nd Floor, "Bartleet House"
65 Braybrooke Place
Colombo 2

*Email: nishanthap@bartleet.com*

(C-2705)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.